ஸ்ரீ

திருஞான முத்திரை துணை

ஸ்ரீ வானமாமலை மடம் ஆஸ்தான வித்வான்,

தென்திருப்பேரை:

அபிநவ காளமேகம்

அபிநவ பிள்ளைப்பெருமாளையங்கார்

ஸ்ரீ. அநந்தகிருஷ்ணையங்கார்

அவர்களியற்றிய

# திருப்பேரைக்கலம்பகம்

மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி

டாக்டர். வே. சாமிநாதையர் அவர்கள்

மதிப்புரையுடன் கூடியது.

நூலாசிரியரின் இளைய சகோதரர்

ஸ்ரீ. நம்பி ஐயங்கார் அவர்கள் இயற்றிய

அரும்பொருள் விளக்கத்துடன்

திருநெல்வேலி, அட்வகேட்

ஸ்ரீமான் A. N. மகரபூஷணையங்காரவர்களால்,

விருதுநகர், எஸ். பி. பிரஸில்

அச்சிடப்பெற்றது.

பதிப்புரிமை] 1937. [விலை அணா 8.

PRINTED AT THE S. P. PRESS,
VIRUDHUNAGAR.
*January, 1937.*

## மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி
## டாக்டர். வே. சாமிநாதையரவர்கள்
# மதிப்புரை

தியாகராஜ விலாஸம்,
திருவேட்டீஸ்வரன் பேட்டை,
சென்னை, 25-12-1936.

ஸ்ரீ வானமாமலை மடம் ஆஸ்தான வித்வானும், தென் திருப்பேரைத் தலைவாசியுமாகிய ஸ்ரீமான் அநந்தகிருஷ்ண ஐயங்காரவர்களுடைய செய்யுள் நூல்கள் சில காலமாக அச்சு வாகனமேறித் தமிழ்நாட்டார் படித்து இன்புறும் நிலையை அடைவது கண்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். தமிழ்ச் செய்யுள் இயற்றுந் திறமையில் இவர்கள் காளமேகம் முதலிய கவிகளை நினைக்கச் செய்கிறார்கள். நினைத்த காலத்தில் அமைத்துக் கொடுக்கும் வரையறைகள் பொருந்த யமகம், திரிபு, சிலேடை முதலியவைகளை அமைத்து எளிதிற் பாடும் இவர்களுடைய ஆசுகவித் தன்மை தமிழ்நாட்டுக்கும் தென்திருப்பேரைக்கும் பழைய காலந் தொடங்கி இருந்து வரும் பெருமையை நிலைநிறுத்துகின்றது. இவர்கள் வடமொழியிலும் புலமை யுடையவர்கள்.

இப்பொழுது வெளியிடப் பெறும் "**திருப்பேரைக் கலம்பகம்**" இவர்கள் பிறந்த திவ்ய தேசத்தில் எழுந்தருளி யிருக்கும் குழைக்காதர் விஷயமாக இயற்றப் பெற்றது. இதனைப் பல வருடங்களுக்குமுன் இவர்கள் இயற்றினார்கள். பலபல சமயங்களில் தனித்தனியே இயற்றப்பட்ட பல தனிப் பாடல்களில் இவர்கள் காட்டியிருக்கும் விசித்திர அமைப்புக்களை ஒருங்கே இந்நூலிற் காணலாம். தமிழ்ப் புலமை பழைய நிலையில் குறைந்துவிட்ட இக்காலத்தில் இத்தகைய கவித்வ சக்தியுடைய ஒருவரைக் காணுதல் அருமையிலும் அருமை.

தமிழ்நாட்டினர் இவர்களுடைய நூல்களைப் படித்து இன்பங் கண்டு, மேன்மேலும் இவர்கள் இயற்றிய நூல்கள் வெளிவரும்படி ஊக்கமளிப்பார்களென்று நம்புகிறேன்.

இங்ஙனம்
(ஒப்பம்) வே. சாமிநாதையர்.

# பாராட்டுரை

திருப்பேரைக் கலம்பகம், திருவரங்கச் சிலேடை மாலை ஆகிய என் நூல்களை அச்சுக்குக் கொடுக்கும் முறையில் சுத்தமான கையெழுத்துப் பிரதிகளாக எழுதிக் கொடுத்தும், என் கருத்துக்கேற்பத் திருவரங்கச் சிலேடை மாலைக்குத் தாமாகவே குறிப்புரைவரைந்தும், இவற்றை அச்சிடுங்கால் உடனிருந்து அச்சிதழ்களை ஒப்பு நோக்கிப் பரிசோதித்தல் முதலிய எல்லாப் பொறுப்புக்களையும் வகித்து, என் நூல்கள் வெளிவருதற்குப் பெருந்துணையாயிருந்து வருகிற விருதுநகர், நாடார் டவுண் ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியர் சிரஞ்ஜீவி A. இராஜகோட்டியப்ப பிள்ளையின் அன்பும் ஆர்வமும் பாராட்டற்பாலன.

ஸ்ரீ. அநந்தகிருஷ்ணையங்கார்.

மதுரைத் தமிழ்ச் சங்கக் கலாசாலைத்
தலைமையாசிரியர்,
உபய மஹா வித்வான், ஸ்ரீமத்.
உ. வே. திருநாராயணையங்கார் ஸ்வாமி அவர்கள்
மனமுவந்தளித்த

# அபிநந்தனப் பத்திரிகை.

31—8—1935.

நேரிசையாசிரியப்பா

திருமக ளென்றும் மருமக ளொடுவாழ்
சீரியன் தென்றிருப் பேரைமா நகரோன்
தேசமர் சீநி வாசவே தியனார்
நன்மைப் புதல்வன் தொன்முறை வழாது
வடமொழி தென்மொழி திடவல் லுநனாத்
தலவகா ரம்மென உலவுநற் சாமமாம்
வேதமுந் தமிழ்தரு வேதமு முணர்ந்தோன்
உயர்ந்தோர் குழாத்தி னுட்கொளப் பெற்றோன்
அநந்த சயனத் தநந்தன் பதமிசை
புனைந்தசந் திரகலா மாலையும், பொன்னிசூழ்
திருவ ரங்கச் சிலேடை மாலையும்
திருப்பே ரைப்பதி விருப்புறு மாற்கு
நலம்படி யின்சொற் கலம்பகம் முதலாப்
பலபிர பந்தம் பலமுறப் பாடி,
வானமா மலைமுனி வரரருள் அபிநவ
பிள்ளைப் பெருமாள் எனும்பெயர் பெற்றோன்
தனிப்பா மஞ்சரி யினிப்பா வியம்பினன்
காள மேகக் கவியெனப் புவிசொலும்
அநந்த கிருஷ்ண வாரியன்
கனிந்த செஞ்சொற் கவிஞ ரேறே!

# மதிப்புரை

*திருமணம். செல்வக்கேசவராய முதலியார்* M. A.,

மதராஸ், 12—6—'11.

*பாளையங்கோட்டையில், சைவ சமயாபிவிர்த்தி ஸபையின் இருபத்தைந்தாவது வருஷோத்ஸவத்தின் பொருட்டு, நான் சென்றிருந்த காலத்தில், தென்திருப்பேரை, கவி. ஸ்ரீ அநந்த கிருஷ்ண அய்யங்காரும், அவர் சகோதரரும் அங்குற்றிருந்தனர். நானும் பிறரும் தங்கியிருந்த மாளிகையில் அவரைச் சந்திக்கும் சமயம் நேர்ந்தது. நேர்ந்த விடத்து, அநந்தகிருஷ்ணர் தாம் இயற்றிய ஸ்ரீ பத்மநாப ஸ்வாமி சந்திரகலா மாலை, திருவரங்கச் சிலேடை மாலை, தனிப்பா மஞ்சரி, திருப்பேரைக் கலம்பகம் முதலிய நூல்களினின்றும் பல பாக்களை எடுத்தோதி விளக்கினர். புதிய வசன நூல்களை வாசிப்பதும், எழுதுவதும் எனக்குக் காலக்ஷேபம். புதிய செய்யுள் நூல்களை நான் பார்ப்பதுமில்லை; கவனித்துக் கேட்பதும் இல்லை. ஆயினும், இந்தக் கவியின் சிலேடைகளைக் கேட்ட அளவில், காளமேகம் அகாலத்தில் வந்து கவிமாரி சொரிகின்றதோ? என்கிற ஐயம் புகுதலாயிற்று. இவருடைய மடக்குகளைக் கேட்ட அளவில், சைவ எல்லப்ப நாவலரையும், பிள்ளைப்பெருமாளையங்காரையும், மீண்டும் பார்க்க வேண்டுமென்கிற எண்ணம் எழலாயிற்று முப்பாலில் முடிவான பாலனைத்தும் இவர்பால் கண்டு, ஏனைப்பால்களை அப்பால் விடுதற்கான வெறுப்பும் போந்தது. ஏனை ரஸமெல்லாம் பாதரஸமே; இவர் கவிரஸமே ஷட்ரஸமாதலால், இதனை யின்னுங் கோடலான விருப்பும் உளதாயிற்று. அப்போது அங்குற்ற ஸ்ரீவைகுண்டம் தாசில்தார் ஸ்ரீ. வேங்கடசாமி முதலியா ரவர்கள் கவிராஜரை 'நிமிஷகவி' யென்றார். அந்தோ! காட்டைக்கவி, கலைக்கவி என்ற வழக்காறின்றே! என வருந்தினேன். இக்காலக் கவிகளில் அநேக ரிருந்தும் இறந்த காலக் கவிகளே. இந்த அநந்த கிருஷ்ணர் நிகழ்கால எதிர்காலக் கவியென்பது திண்ணமாகத் தோன்றுகிறது. மதுரகவி ஆழ்வார் குலத்தரான இவரையும் இக் கால மதுரகவி என்றே போற்றவேண்டும். இவ்வென் கூற்றைக் கேட்பவர் இதனை அதிசயோக்தியாகக் கருதக்கூடும். இவருடைய கவிகளைக் காண்பவரும், கேட்பவரும் என் கூற்றை ஸ்வபாவோக்தி யென்றே கொள்வர். இந்தக் கவிராஜர் இன்னும் கால நீடித்தல் செய்யாது, தமது நூல்களை யெல்லாம் ஒருசேர முத்ரித்துக்காட்டி என் கூற்றை மெய்ப்பிப்பாரென்று விரும்புகிறேன். இவர் கருவிலே திருவுடைய கவியென்பதே என் கோள்.*

அபிநவ காளமேகம்
அபிநவ பிள்ளைப்பெருமாளையங்கார்



ஸ்ரீ. அநந்தகிருஷ்ணையங்கார்

ஸ்ரீ

திருஞானமுத்திரை துணை

# திருப்பேரைக் கலம்பகம்

## காப்பு

*கட்டளைக் கலித்துறை*

### நம்மாழ்வார்

பூமா தருண்மிகுந் தென்றிருப் பேரைப் புனிதநகர்
மாமான் மகர நெடுங்குழைக் காதன் மலர்ப்பதத்திற்
பாமாலை யான கலம்பகம் பாடப் பரிந்தவரண்
தேமாவின் சோலைக் குருகைப் பிரான்கழற் சேவடியே. க

### பன்னிருவர்

மாப்பொய்கை பூதனற் பேயார் கலியன் மதுரகவி
பாப்புகழ்க் கோதைநம் பட்டர் பிரான்றொண்டர் பாதப்பொடி
பூப்புரந் தான்றிருப் பாணன் மழிசைமன் பொன்னளிசேர்
காப்பொருந் துங்குரு காபுரி யோனிவர் காப்பெனக்கே. உ

### உடையவர்

வெய்ய மலர்க்கணை கொள்மத வேள்கர வேழத்தையும்
மெய்யணு காத புறமத மாங்கர வேழத்தையுஞ்
செய்பவுட் டாம தாற்பகைத் தீர்த்திடச் சீயரென்றே
வையம் புகழுநம் பூதூர் முனிவரன் வான்றுணையே. ங

## மணவாளமாமுனி

அந்தா மரையுறு மாமகிழ் மாற னகமகிழ
வந்தா யிரங்கவி மாமகிழ் மாறன் வழுத்தவதில்
நந்தா ரணியர்க் கதிரசங் காட்ட நலமிகுநூற்
றந்தாதி கூறு மணவாள யோகி யடியரணே. ச

## குரு வணக்கம்

சிட்டர் மருவு வரமங்கை யூரிற் சிறந்தவெதிப்
பட்டத் திருபத்து மூன்றுவ தாகப் பரவிபெறற்கும்
உட்டமர் தீர்த்த சடகோப யோகி யுகமலர்த்தாள்
கட்ட மிறையு மணுகா தெனவென் றாங் காத்திடுமே. ரு

## அவையடக்கம்

தேசப் புலவிர்!நம் மாழ்வார் கவிகொள் செவிநெடியோன்
ஆச ணுகுமென்றன் புன்பாவு மேற்ப னரும்பரத்து
வாச முனிவன் விருந்துகந் தான்முன் வனச்சவரி
நீசம தாமெச் சிலையுமுண் டானிது நிச்சயமே. சா

ஸ்ரீ

திருஞானமுத்திரை துணை

# திருப்பேரைக் கலம்பகம்

## நூல்

### மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

எட்டடித் தரவுகள். உ

பூங்கமல மாளிகையிற் பொலிவுறுமத் திருமகளும்
ஓங்குபுகழ் நிலமகளு மூவர்திருபா லணைந்திலக,
சிறந்தமலர் மகளுடனே செய்யதிருப் பாற்கடலிற்
பிறந்தமணி யணிமார்பிற் பிறங்கிரவி போல்விளங்கப்
புள்ளரசன் சேனையர்கோன் புறங்காப்பப் பணிகேட்ப
வெள்ளவிர சாநதியின் மேவுபெரி யோர்துதிப்ப,
அஞ்சுதரி சனமுதலா மஞ்சுபடை புடைமிளிர
எஞ்சலினன் மறைபரவு மெழிற்பாம பதமமர்ந்தோய்! க

மருவலர் தானவர் மருவலர் சொரிந்தாதி
வருணருட னென்றுமே வருணைசெய் தினிதேத்தத்
திருவழுதி நன்னாட்டுத் தெய்வப் பொருநையினால்
தருநிழலில் வாழ்விபுதர் தனிநகர்போற் சீர்பெருகுந்
திருப்பேரை மாநகர்வாய்த் திகழ்புரிசைக் கோயிலிற்பொன்
பொருப்பேரை வாய்கனகப் புட்கரவி மானத்துள்
தினமுலகி னுயிர்ப்பயிர்கள் செழித்தோங்க வருண்மழைபெய்
வனமுகில்போல் வீற்றிருக்கும் வரத! குழைக்காதா! கேள்: உ

### ஈரடித் தாழிசைகள். ௬

மறையா யதன்பொருளாய் மறைப்பொருளி னுட்சுவையாய்க்
குறையாச் சுவைப்பயனுக் கோடியண்ட முற்றோய் நீ! க

ஆதியா யநாதியா யனைத்துயிராய் நீயெவையுஞ்
சோதியா நின்றபரஞ் சோதியென்றாற் பொய்யாமோ? உ

நற்போத னெனுமப்ப னன்குணரா நின்மகிமைப்
பொற்போத விரிவினையற் பப்போத னுணர்வேனோ? ௩

விட்டுணுவா யுலகமெலாம் வியாபித் திருக்குமுனை
விட்டெடைதயார் துதித்தாலு மேவுதுதி நினக்கேதான்! ௪

பாலத் துருவனுயர் பதம்பெறவே யருள்செய்த
மாலத் துருவ!நின்றன் மகிமைதனக் களவாமோ? ௫

எங்குமுள னெனச்சிறுவ னியம்பிடவே தம்பமதிற்
சிங்கமதாத் தோன்றியநின் சீருணர வல்லார்யார்? ௬

## ஈரடியராகங்கள். ௪

இடைமட மகளிர்க ளிருதன நெருடினை!
இடையுறு மவருடை யெழிலுடை திருடினை! ௧

திடனுட னெழுமெழு திறவிடை தழுவினை!
அடைபடு படவிட வரவுட லணுகினை! ௨

இடரொடு கடகளி றிடுமொலி செவிபட,
அடலுள கருடனொ டணுகிமு னருளினை! ௩

தடமரு திடையவை சடசட வெனவிற
உடனிரு கடவுள ருறநல முதவினை! ௪

## பெயர்த்தும் ஈரடித் தாழிசைகள். ௪

மூவுலகெ லாம்படைத்த முண்டகனைப் பெற்றவனைப்
பூவுலகில் வசுதேவன் புதல்வனென லோர்வியப்பே! ௧

பண்ணவருக் கமுதளித்த பாலாழி நாயகனீ
வெண்ணெய்கவர்ந் தண்டரில மேவியுண்ட தோர்வியப்பே! ௨

வயிற்றிற் புவனமெலாம் வாய்ந்தவனீ யோர்சிறிய
கயிற்றா லசோதைமுனங் கட்டுண்ட தோர்வியப்பே! ௩

பங்கயத்தை யொத்தநின்றன் பாதம் பெறவருமக்
கங்கைகுகன் வங்கமதாற் கடந்ததுவு மோர்வியப்பே! ௪

### நாற்சீ ரோரடி யம்போதரங்கம். ௪

செல்வமும் வறுமையுஞ் செருக்கு மாயினை
கல்வியு மூடமுங் கருத்து மாயினை ௨
எரிவளி புவிபுன லெய்ந்த விண்ணொடு
மரிவையும் புருடனு மலியு மாயினை ௪

### முச்சீரோரடி யம்போதரங்கம். ௪

சிலையக லிகையெழ மிதித்தனை
திரைகட லலமர மதித்தனை ௨
சிலைநிசி சரர்பட வளைத்தனை
திதிசுத ரிடமிடர் விளைத்தனை ௪

### இருசீ ரோரடி யம்போதரங்கம். அ

தெருணி றைந்தனை
யருளு றைந்தனை ௨
செவிப டர்ந்தனை
சவிப டர்ந்தனை ௪
முருகு வந்தனை
குருகை வந்தனை ௬
மூவ ராயினை
யாவு மேயினை அ

### தனிச்சொல்

எனவாங்கு,

### சுரிதகம், ஆசிரியப்பா

(மடக்கு)

அம்புதி வளைந்த வம்புவி யின்கண்
தேசமர் சோழமா தேசமீ தெழில்சேர்
காவிரிந் தோங்குங் காவிரி மருங்கிற்
றானமா ராமன் றானமுன் செயவே
௫ பதினெண் பதியுட் பதிவா னவருட்

சிலரவ ணின்றுஞ் சிலம்பாற் றுவளச்
சுந்தர பாண்டியச் சுந்தர வேந்தாற்
பேரழ கார்திருப் பேரைவந் தணுகி
யளகையம் பதிபோ லளவிலாச் சீரொடு
௰ நித்தமும் வாழு நித்தியர் போன்ற

மாநூற் றெளிந்த மாநூற் றெண்மர்
இனத்திற் றுளோ ரினன்போல் விளங்கி
அன்னவே தன்னெனா அன்னவர் புகன்றிடு
மிசைமிகு கானமா விசையுநன் மறையுடன்
றிரமதாப் பதின்மர்சொற் றிரவிட மறையுளாட்

குழையுறக் கேட்குங் குழைநெடுங் கண்ணே!
வெள்ளைச் சரிசங் கேந்திய விமலை!
பெரும்பிழை செய்யும் பித்தனே னின்பால்
அரும்பதம் போற்றி விரும்புவ தொன்றே:
அதுதான்,

என்னெனிற் றென்றிசை மன்னவன் றூதர்
பாவியா னென்றெறு ணவிகொ ளேஉங்கா
லறிக்கையோ டென்னைக் குறிக்கவொண் ணாததாற்
சிற்றறி வேன்பல குற்றமே செய்யினும்,
வருணனுக் கருள்செய் கருணையங் கடலே!

பொறுத்தடி யேற்குப் புலப்படத் தோன்றி,
கடைக்கணித் தருள்வது காரிய மெளியேன்
அடைக்கல நினையே யடைந்தனென் புகன்றே. (௧)

## நேரிசை வெண்பா

கன்றை நினைந்தாவுங் கனங்களஞ்சி ராயர்களு
மொன்றா பயம்விடவே யோர்குடையாக்—குன்றைக்
கணங்கவித்தார் தாளிற் கருக்குழியிற் சேரா
வணங்கவித்தார் நெஞ்சே! சொல் வாய். (௨)

## கட்டளைக் கலித்துறை

வாயா தவன்மதி கண்ணுக வாய்ந்தவன் வஞ்சகர்பாற்
றோயா தவன்றென் றிருப்பேரை தோய்ந்தவன் றாணில்வந்தே
காயா தவன்விறற் றந்தையைக் காய்ந்தவன் காளியன்மேற்
பாயா தவனெனிற் றீப்பாய்ந் தவன்பஞ்ச பாவங்களே. (௩)

## எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியச் சந்த விருத்தம்

வங்கமுல வுங்கடலி லம்புதனை யுண்டதிரு
மங்குலிற் சேர்மி னெனவே
யிங்கலரி லங்குதிரு மங்கையெழி லங்கமுறும்
எங்குழைக் காத னுறையூர்,
கங்கையணி சங்கர னெனும்படி விசும்பிலுள
கங்கைவிற் சோம னெனுகத்
தெங்குகமு குங்கதலி யும்பலவு மெங்குமுயர்
தென்றிருப் பேரை நகரே. (௪)

## கலிநிலைத்துறை

நகரார்சக டுருள்போனித நவமா வருபவமா
மகராலய மதையானினி மருவா தருள் புரிவாய்
சுகராதிப முனிவோர்தொழு சுடரே! கருமுகிலே!
மகராயத கருணா! வளை மதிபோலொளிர் கரனே! (௫)

## எண்சீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்
(மடக்கு)

காத்திகிரி யானுங் காத்திகிரி யானுங்
கார்துவனைத் தானுங் கார்துவனைத் தானும்
திருத்துவரை யானுந் திருத்துவரை யானும்
சீரங்கத் தானும் சீரங்கத் தானும்
உருக்குமணி யானும் உருக்குமணி யானும்
ஓங்காரத் தானும் ஓங்காரத் தானும்
திருக்கமலத் தானுந் திருக்கமலத் தானும்
திருப்பேரை யானுந் திருப்பேரை யானே! (௬)

## புய வகுப்பு

### ஆசிரிய வண்ண விருத்தம்

பேரழ குறுந்திருப் பேரைவலி சந்தனச்
சேறுபடி யுந்தனக் குவடே யணைந்தன;
பீதியுல கங்கொளத் தீதுபுரி பிங்கலப்
பேரனுட லந்தனைப் பிளவா வகிர்ந்தன;

பீதக விலங்கையிற் பாதக ரிறந்திடச்
சீதையு மகிழ்ந்திடச் செருவே புரிந்தன;
பேதவகை மூந்துறப் பேசுதிரி யம்பகச்
சேதிநிரு பன்படச் சிரமே யரிந்தன: (வ

வாரிதியை யண்டருக் கார்வமுட னன்றுநற்
சாரவமு தந்தனைத் தரவே கடைந்தன;
மாமனக ரந்தணிற் போய்வலிய தந்தியைக்
கோடிற மலைந்ததைக் கொலையே புரிந்தன;
மாமகர குண்டலக் காதணி யிலங்கிடப்
பானுவமை யஞ்சனக் கிரிபோல் விளங்கின;
மாதொடு மிகுந்தழற் கானக மடைந்திடக்
காதியக வந்தனைக் கரமே தடிந்தன: (இ

சேரிரவி மைந்தனுக் காமுன மறைந்துநற்
றுரைகொழு, நன்படச் சரமே துரந்தன;
சீரிய குருந்திடைத் தாரணி பொருந்திடைக்
காரிகையர் தந்திடைக் கலையே கவர்ந்தன;
தேனினை யருந்திடத் தேனின மிடைந்தநற்
றேனமை யருந்தொடைத் திரளா னிறைந்தன;
தேமலவிர் கொங்கைமெய்ப் பாமைபவ னந்தனிற்
பூமலியு மம்பரத் தருவே கொணர்ந்தன: (ஏ

வீரவிச யன்றிருத் தேரில்விச யம்பெறச்
சாரதிசெ யுந்தொழிற் கழகா விசைந்தன;
மேதினியி லன்பரைச் சீரொடு புரந்திடச்
சோதிமிகு மைம்படைச் சுமையே சுமந்தன;
வேரிலகு சிந்துரத் தூரிலுறு சுந்தரச்
சூரிய னருங்கவிச் சுதையா னணைந்தன;
வீரைபொரு வுந்தடப் பேரைநக ரந்தனிற்
சேரணி நெடுங்குழைத் திருமால் புயங்களே! (எ)

## நேரிசை வெண்பா

புயங்கமலை நின்றனைப் போரானை முன்னந்
தயங்கமலை கண்ணபிரான் றன்னை—நடங்கமலை
செஞ்சாலிப் பண்ணையிற்செய் தென்பேரை யானைநிதம்
நெஞ்சே! நினையிந் நிலத்து. (அ)

## கட்டளைக் கலித்துறை

இந்நிலத் தற்ப மதியா ளரைத்தின மேத்துவதா
லென்ன பயன்பெறு வீர்புல வீர்!நல மெண்ணுவிரேன்
முன்னங் குசேலன் வறுமையை நீக்கு முகுந்தன்பெருங்
கன்ன னெனத்திருப் பேரையுற் ரூற்குக் கவிசொன்மினே! (கூ)

## எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்
(மடக்கு)

கவிசோலை மலைதன்னை முன்னங் கவித்தார்
கவிவே தியன்கண்ணை முன்னங் கவித்தார்
கவின்மேவு குருகூர் பாவைக் களித்தார்
கனமான வுடையவர் பாவைக் களித்தார்
கவிவாணர் பாடுந் திருப்பேரை யுற்ரூர்
கழறித் துதிக்கத் திருப்பேரை யுற்ரூர்
கவியாற் பெருஞ்சேது கட்டப் படுத்தார்
கணமேனு மன்பரைக் கட்டப் படுத்தார். (ய)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

தாரணியிற் காதலொடு மாதங்கர் தனைநாடித் தற்கா லத்திற்
சாருமற்ப சுகம்பெறுவீர்! பேரின்ப வாழ்வுறவே சாற்றக் கேண்மின்!
வீரமத யானைதனை வென்றரியாத் திருப்பேரை மேவி யென்றுஞ்
சீரியபொற் கலையோடு திகழ்ந்திடுமெம் பெருமானைச் சேர்மின் னீரே!

## தாழிசை

நீரதஞ் சிரோருகம் நெடுங்கணுஞ் சரோருகம்
நெஞ்செழும் புரோருகம் நிமிர்ந்தபொங் கரோருகம்
வீரைவந்த சுதைசொலென்று வீண்மொழிந்த கவிஞர்போல்
விரகதாப நரகமீது மேவிடாம லருள்வை; நீ!
பாரிலந்த கன்புதல்வர் படைகளோடு மந்தகன்
பக்கமாகத் தனதுளாய பக்கமைவர் பாலுறப்
பாரதச்செ ருக்கலந்த பாணவெம்மை தீரவே
பைம்பொழி னிழற்றுபேரை பற்றிவந்த மாயனே! (யஉ)

### நேரிசை வெண்பா

மாய மதனை மதியைச் சிவன்முடித்த
மாய மதனை மதித்தன்றோ—மாயவனை
விட்டேன் பூவம்புநிலா வீழ்க்குமெனைப் பேரைதனில்
விட்டேன் மொழியாய் விடு. (௰௩)

### பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

### மதங்கி

(மடக்கு)

விடையொடு முழவர் பணைத்திருப் பேரை
விட்டுழும் பணைத்திருப் பேரை
விமலனை மதங்கி! துதிக்குமுன் பாடல்
வெள்ளமிழ் துதிக்குமுன் பாடல்
நடையினை நோக்கி லதற்கிணை யரம்பை
நற்றொடை கஞக்கிணை யரம்பை
நாசியெண் மலர்வாய் துவரணி யாம்பல்
நகுகதிர் முத்தணி யாம்பல்
தடமுலைத் திரளோ தமனியச் சிலம்பு
தாள்களி லொலிப்பதச் சிலம்பு
சங்கணி கரத்திற் றரிப்பது முகவாள்
சார்ந்ததும் பெரியச முகவாள்
அடையளிக் குழலிற் காமனை யுடைவாள்
அழகினில் ரதிமனை யுடைவாள்
ஆடவ ருளத்தை மதிக்கவந் தனையே
ஆற்றலம் மதிக்கவந் தனையே! (௧௪)

## இதுவும் மதங்கி

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

வந்தனமே யன்பர்செயும் மால்வாழ்தென் பேரைவரு மதங்கி யே!நீ
நுந்திடையிற் பரிதானை மொழிதனிலே தனியிரதந் தலையிற் றும்பி
சந்திரனே ரானனத்திற் றனதுகொடி கரந்தனில்வாள் தாங்க வைத்துச்
சிந்தையுட னிலஞ்செயிக்க மதன்விடுத்த தந்திரியோ? செப்பு வாயே.

### களி

### பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

செப்பு வரிய பலகலைகள் தினமே மருவித் தென்பேரை
திகழு மடல்சே ரப்பனையே தெய்வத் தலைவ னென்றெவரும்
ஒப்பப் புகழுங் களியர்கள்யாம் உழலுஞ் சமண சாக்கியர்காள்!
உலகிற் குடிகள் மருவலையேல் ஒளியா ரரசர்க் கென்னபயன்?
எப்பு வனத்து மாதவமே யிலையேன் முனிவர்க் கென்பெருமை?
இவண்மே தையையே யடையாதார் எவர்தாம் புலவரெனச் சிறந்தார்?
அப்பின் மாரி படியலையே லவனியுயிர்கள் பிழைத்திடுமோ?
அதனாற் றூலம் பொருவடிகள் அடைவீர் பெறுவீர் பல்வளமே!

### நேரிசை வெண்பா

பல்வளங்கொள் சோலைகளும் பண்ணைகளும் வாவிகளும்
செல்வருமஞ் சங்குலவு தென்பேரை—நல்வனசப்
பொற்புத் திருக்குடையார் போற்றூர் திருக்குடையார்
வெற்புத் திருக்குடையார் வீடு. (கஎ)

### கட்டளைக் கலிப்பா

(மடக்கு)

வீட்டிற் றம்பொலன் போற்றனு மானையே
விரும்ப லூற்றிடும் போற்றனு மானையே
பீட்டிற் கொண்டிடும் பூவனை யாழியே
பிறங்கம் பெய்ததும் பூவனை யாழியே
சூட்டிக் கொண்டதும் கோதையி னாரமே
துயிலி டம்பெரு கோதையி னாரமே
தீட்டி ரும்படை பேரைவை குந்தமே
செங்கண் மாயற்குப் பேரைவை குந்தமே. (கஅ)

### தாழிசை

குந்த ளந்த னைவிரித்துக் கோதைமார்கள் முன்பிழக்
குவலயத்துப் பார்சேமோடக் கொடியபாசம் வீசியே
அந்த கன்ற மர்களுங்க ளருண்மயான் வுயிர்கொள
அடையு நாளி னின்வுரும லையடர்க்கு மாதலால்

இந்த நாளி னீவிர்பின்ன ரினியவீட்டை யணுகுவான்
எண்ணியேயி றைஞ்சுமின் னிசைந்தபோத மாந்தர்காள்!
செந்த மிழ்ச்செ யுட்சடாரி 'சேர்வ'னென்ற பேரைவாழ்
செய்யதான கன்னபாசர் சீர்படிந்த வடிவையே. (கக)

அறுசீர்க்கழிநெடிலடி
ஆசிரிய வண்ண விருத்தம்

ஏயு மெனக்கிசை யாதர வப்பனு மேதமின் மெய்த்தமருந்
தாயு மகத்தம மியாவு மொழித்திடு தாரக நற்குருவும்
பேயி னுருக்கெட மாமுலை யைச்சுவை பேரை நகர்க்கதிபர்
வாயு மெழிற்குழை தோயு மகத்துவ மாயவர் பொற்பதமே.(உ0)

கைக்கிளை மருட்பா

பதமறிஞர் போலப் படித்தலைநா டுங்கண்
மதன்கணைபோன் மாவலிமை மன்னும்—விதம்விதமா
வின்மணி மாடம் மிளிர்திருப் பேரைப்
பொன்மலர்ச் சோலைப் பொருப்பில்
நின்மல னளந்த நிலமிணிக் கொடியே! (உக)

## வேதியரை வினுதல்

கட்டளைக் கலித்துறை

கொடியாடு மாடத் திருப்பேரை மாதவர் குன்றமதிற்
கடியார்ந்த வேடன் கணைவிட வேநற் கலைநெகிழ
விடியாது வந்த விளமான் புகுமிடம் விள்ளுவீர்மால்
அடியா ரெனச்சத் துணர்வண் டுறவுகொ ளந்தணரே.(உஉ)

சந்த விருத்தம்

அந்த ராய மிடைந்த வேலை யடைந்து நீயதை யுந்தடிந்
தந்த மாமத தந்தி யாவெனை யன்பி னோடுவி ரைந்துகா
அந்த ராதல முந்தி யேபடை யம்பு யாசன னும்பணி
அந்த காரியு மென்று மேதொழ வண்டு பேரைமு குந்தனே!

### நேரிசை வெண்பா

முகுந்தபுரு கூதற்கு முன்னுதவி செய்மு
சுகுந்தன் துதிகொள் சுடரே!—மிகுந்தகைசேர்
காவளர்தென் பேரைநெடுங் கன்னு! வெனக்குநிதி
பூவளர்ந்த நின்னருந்தாட் பூ. (உச)

## அம்மானை

### தாழிசை (மடக்கு)

பூந்துளவன் தென்பேரைப் புங்கவன்மண் மாவலிபால்
ஏந்துகரத் தோனு விரந்தனன்கா ணம்மானை!
ஏந்துகரத் தோனு விரந்தனனே யாமாயின்
மாந்தர்பெருங் கன்னனென வாழ்த்துவரோ வம்மானை?
வாழ்த்தல் படியளக்க வாய்ந்ததனு லம்மானை! (உரு)

### நேரிசை வெண்பா

அம்மானை மாய்த்தவனை யம்மானை மேய்த்தவனை
அம்மானை யெய்பேரை யம்மானை—விம்மானை
காலன்பா லாகமலை கண்ணனையே யன்றியொருக்
காலன்பால் வேறுதொழேன் காண். (உசா)

### கட்டளைக் கலித்துறை

காணன்பர் போற்று வடமலை தென்மலை கண்ணபுரம்
பாணன் பணிபொன் னரங்கங் கரிவரை பைம்பொழில்கள்
சேணண்டி யோங்கிடுங் கோளூர் குறுங்குடி சீர்த்தலமாம்
வாணன் புயங்கள் துணித்ததென் பேரைப்புள் வாகனற்கே.

## மேகவிடு தூது

### சந்த விருத்தம்

கனமாலை யலைவேலை யதனீரி னுெடுதாவு
கவிசாரு மலைமேவு புயல்காளென்
மனமாலை யுறுவேழ மெனநோவ வதிரூப
மதவேளி னலர்வாளி வதையாமுன்

தினமாலை மதிநேரு முகமாத ரிசைபாடு
திகழ்பேரை யெனுமூரில் விரைவேகி
வனமாலை முனநாடி யெனமாலை யுரையாடி
வனமாலை யுடனோடி வருவீரே! (உஅ)

## எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

வருமுகில்காள்! பயங்கொண்டு சத்திக் கின்றீர்
மலைவாய்நுங் கண்ணின்று பொழிகின் றீர்நீர்
பெருமின்ன லிந்திரவின் மேவு கின்றீர்
பேராசை தனையடைந்தீ ருலகி னீரும்
அருமைமிகு பரமபத மெனுந்தென் பேரை
அணிநகரி லுயர்மறையின் கானங் கேட்ப
இருநெடுங்கா துளனுக் கைவகு மால்பால்
என்போல்மால் கொண்டீரோ வியம்பு வீரே! (உகூ)

## நேரிசை யாசிரியப்பா

இயல்புட னினமாக் கயல்நட மாட
நற்புன லாடுங் கற்பமை மடவார்
எழின்மிகு மீன விழியிணை யென்றே
கையமை வலைஞ ரையமுற் றிடவும்
பையர வல்குற் றையலர் விழியின்

நிழலினை வரிகொண் முழுமீ னெனவே,
நத்திவெண் குருகு கொத்திவெட் கிடவும்
விளங்கும் பெரியோ ருளம்போற் றெண்ணீர்ப்
பொருநைத் துறையில் வருணனு மந்நாள்
பாசங் கவர்ந்த நீச வசுரனை

வென்றிட வருள்செய் நன்றியை யுணர்ந்தே
பற்பல தீர்த்த நற்பல னமைப்பக்
கூடு புனற்பெயர் நாடுந் துறைதனின்
மஞ்சனங் கொண்டருள் மஞ்சன வண்ணா!
சீரைப் படைத்ததென் பேரைக் கிறைவா!

ஒப்பி லாகமமறை செப்பும் பெரியோர்,
சங்கந் தனையடைந் தெங்கும் புகழ்சேர்
அன்பர்தஞ் சரித மின்புறக் கேட்டு
மெய்த்தம மொழித்தே தத்துவ முணராப்
பாவியா மென்ற னாவி கழன்முன்

நயமா ஞான நயனந் தந்தெனைத்
தாமரை புரைநின் றாட்கே
யாளாத் திருத்தி யாள்வதுன் கடனே! (௩௰)

நேரிசை வெண்பா

ஆளு மகமு மருமைத் திருமுகமுந்
தாளும் வனவாசஞ் சார்முகிலே!—நீளுங்
குழைக்காதா லத்துநட்ட கோவே!தென் பேரைக்
குழைக்காதா! காவெனையாட் கொண்டு. (௩௧)

## கிள்ளை விடுதூது

எண்சீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

கொண்டறவழ் சோலைதனி லண்டு கிளியே!
கூறுமொழி கேள்சுகம தாகியே வாழ்வாய்
மண்டலம் புகன்மகர குண்டலக் காதன்
வந்துவந் தணைந்திலன் மலிந்தது மயல்
சண்டனென வெளிரதம் வாளி முரசம்
சந்திர மிவைமிக வருத்து தலினால்
அண்டர்தொழும் பேரையிலவ் விண்டுவைக் கண்டே
அல்லிலெனைப் புல்லவர வொல்லைநீ சொல்லே! (௩௨)

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

(மடக்கு)

சொல்லு மசுரர்க் கினியானுந்
துகளற் றசுரர்க் கினியானுந்
துத்தி யநந்தப் பணியானும்
துலங்கு மநந்தப் பணியானும்

வல்ல கவியா மணியானு
மறுவே கவியா மணியானு
மகிழ்மா றன்றீங் கவியானும்
மதியார் வன்றீங் கவியானும்
தொல்லைக் கலிமுன் படைத்தானும்
சூழார் கலிமுன் படைத்தானும்
துங்க மலையங் குடையானும்
தோய்க மலையங் குடையானும்
நல்ல மஞ்சு வணத்தானும்
நாக மஞ்சு வணத்தானும்
நண்ணார் பேரைப் பதியானும்
நதியார் பேரைப் பதியானே! (௧௧)

## தவம்

### வண்ண விருத்தம்

பதியினை விட்டுக் கடுவன மெட்டிச்
சருகு புசித்துப் பலவாயுச்
சிதைவை யடக்கித் தழலிடை யிட்டுக்
கொடிய தவத்திற் செறிவீர்காள்!
திதிசுதர் தாக்கித் திறவரு ணற்குக்
கருணை யளித்துத் திகழ்பேரைக்
கதிபனை முத்திக் கிறைவனை நத்திப்
பணிய விருப்புற் றடைவீரே! (௧௪)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

அடையாரை மறலிபுரத் தடைத்தாரை
யரிகளைவெல் லரிக ளாய
படையாரைப் பிரமனைமுன் படைத்தாரை
மகரவுருப் பணிசேர் நீள்கா
துடையாரை நூற்றுவர்வாழ் வுடைத்தாரை
யிபகரம்போ லுருண்டு நீண்ட
தொடையாரைக் கரியினிடர் துடைத்தாரை
நலமுறவே தொழுவாய் நெஞ்சே! (௧௫)

## இரங்கல்

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

நெஞ்சமதில் வேளம்பு பாய நின்போல்
நெடுமாலாய் வேதனையும் பெற்றாள் பித்து
மிஞ்சியரைச் சோமனைத்தன் தலைமேற் கைலை
மேவுமரன் போற்றரித்தாள் செவ்வேள் போலிவ்
வஞ்சிதன தருமலர்க்க ணீரா றானாள்
மயக்கமது மிகக்கொண்டாள் மதுபம் போல
மஞ்சலவு தண்டலைத்தென் பேரை மாயா!
மருவாயின் சுதைதந்தே மருவாய் வந்தே! (௩௬)

### அறுசீரடியாசிரியச் சந்த விருத்தம்

வந்துல கந்தனி லென்று முகுந்தர் மதம்பெரி தென்றுணரா
திந்த மதந்தலை யந்த மதந்தலை யென்று புறந்தொழுவீர்!
சிந்தை மகிழ்ந்து மதங்கள் தவிர்ந்து தெளிந்து நெடுங்குழைசேர்
எந்தை பதந்தனை யொன்றி வணங்குமி னின்ப மடைந்திடவே!

## நாரைவிடு தூது

### நேரிசை வெண்பா

திடம்பாவி மாரன் செயலா லெனக்கே
உடம்பாவி வேறுமீ தோர்ந்தே—கடம்பாவில்
நாரா யணாவி நவியென்மால் தென்பேரை
நாரா யணன்பால் நவில். (௩௮)

### கட்டளைக் கலித்துறை

(யமகம்)

பாலனங் கண்டு கரும்பன்ன நன்மொழிப் பாவையையம்
பாலனங் கன்பல வாந்தம ராக்கினன் பண்டுசிசு
பாலனங் கங்கொய்த தென்பேரை மாதவ! பார்த்தமரைப்
பாலனங் கண்டுசெய் வாயே லிவளையும் பாலிப்பையே! (௩௯)

## இரங்கல்

### கொச்சகக் கலிப்பா

(மடக்கு)

பையரவ ரிக்கொடியார் பாழ்மதனு ரிக்கொடியார்
செய்யவளாம் பொற்கொடியார் தீவினையேற் குக்கொடியார்
கையதில்வ லம்புரியார் கனிந்துகலை முன்புரியார்
செய்யநெஞ்சின் மூப்புரியார் தென்றிருப்பே ரைப்புரியார். (சய)

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

யாரிழி குலத்துறினு மூலமென முற்கதறு
யானையை யளித்த நெடுமால்
பேரைமக ரக்குழையர் தாளைவெளி திற்கருது
பேரறிவு பெற்ற வரெனில்
ஆரிய ரெமக்கவர்கள் நான்மறைகள் கற்றுவரு
மாதிவரு ணத்த ரெனினும்
பூரண குணத்தரடி மாமலர் மறுத்தவர்கள்
பூரியர்கள் சித்த மிதுவே. (சக)

## சித்து

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

சித்தர்தொழுந் தென்பேரை மாறன் பாநற்
சித்தர்களின் றிருவருட்கொள் சித்த ரேம்யாம்
சுத்தமதாச் செம்புதனை வெள்ளி தன்னைத்
துலங்கிடுபொன் னாகமேற் காட்டு வோம்நங்
கத்தனரு ளாற்கஞ்சக் குலத்தை யோகோ
கனகமதாத் தெரிவிப்போ மெவரு மெச்ச
வித்தையினு லயத்தையுமா டாக்கு வோமெம்
விருப்பமெலா மோதனத்தே தொந்த மாமே! (சஉ)

## நற்றாயிரங்கல்

### கட்டளைக் கலித்துறை

(திரிபு)

தொந்த வளைக்கரத் தென்பேரை யா!யருள் தொல்மதனால்
நொந்த வளைக்கர மாயிரத் தானென்ன நோக்குமதி
அந்த வளைக்கர வம்போன் றனன்வெண்ணெய்க் காய்ச்சியிடம்
மந்த வளைக்கர விந்தக்கை நீட்டிய வாமனனே! (௪௩)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

மனது கலங்கினு மருடெரு டங்கினும் வறுமை யடைந்திடினும்
இனதனமண்டினுமிடர்மிக வண்டினுமிறையெனும்யான்மறவேன்
வனசன ரன்சுரர் வருண னிதந்தொழு மகர நெடுங்குழையன்
வனமணி நெஞ்சமு மிருபத கஞ்சமு மதிமுக கஞ்சமுமே. (௪௪)

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

கஞ்சநல் விழியார் அஞ்சுக மொழியார்
கருக்குழி யினிப்புகா வண்ணந்
தஞ்சமுன் சரணே சரணமென் றேத்துந்
தாசனேற் கருள்புரிந் திடுவாய்!
மஞ்சணி சோலை சூழ்திருப் பேரை
மாநக ரின்புற வைகும்
பஞ்சவர்க் குதவி செய்தநல் லாழிப்
படையுளாய் சுரர்தொழும் பரனே! (௪௫)

## அன்னவிடு தூது

### நேரிசை வெண்பா

பரந்தாம ரென்றாயரம் பாரா ரெனக்கோர்
தரந்தாம மேனுமவர் தாரார்—சாந்தார்கொள்
ஓதிமட வாருருரையா ரொண்காதர்க் கென்காதல்
ஓதிமமே நீயேனு மோது. (௪௬)

### கட்டளைக் கலித்துறை

ஓதனை யோதனை யாகு மசோதை யுகந்தகுழைக்
காதனை காதனை கோவியர் நேசனைக் காணுந்திறற்
போதனை போதனை பார்த்தற்குப் போரிற் புரிந்தவ
நீதனை நீதனைச் சேர்ந்தார்க்குத் தேவரு நேரல்லரே. (௪௭)

### எழுசீர்க் கழிநெடிலடியாசிரிய வண்ண விருத்தம்

நேரிலழ காருடம்பு சாபமென வேவளைந்து
நீடுதிரை யேபடிந்து நிணமோவிச்
சாரிரும லேயடர்ந்து பீளைகணி லேசொரிந்து
தாணடையு மேயொழிந்து தளராமுன்
ஏரெகின மேறிவந்த வேதனுமை பாகனும்ப
ரீடிலயி ராணிகொண்க னிவர்நாளும்
பாரியுட னேவணங்கு பேரைநகர் வாழ்முகுந்தர்
பாதமல ரேயுவந்து பணிவீரே! (௪௮)

### கலி விருத்தம்

பணிபணி யாக்கொளும் பரன்மு ஞஞ்சுரர்
அணியணி யாத்தின மணவு பேரைவாழ்
மணிமணி வண்ணனார் மலர்ப்ப தந்தனை
யெணியெணி யின்பமே யெய்த லாமரோ! (௪௯)

### நேரிசை வெண்பா

எய்புமதன் செய்தீங்கை யெங்குழைக்கா தற்குரையாத்
தையலர்தா மென்னைச் சகியென்றார்—வெய்ய
வெயிற்குநலி யாதுபுனல் விட்டகன்றி விட்டே
குயிற்கிடமே னீந்ததிந்தக் கொக்கு. (௫௰)

### பன்னிருசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

கொக்கின் வாயைத் தாங்கிழித்தார்
குயிலின் வாயைத் தாங்கிழியார்
கோப மடமா தரைப்புணர்ந்தார்
குணஞ்சே ரிம்மா தினைப்புணரார்

இக்க னரிவின் முன்முறித்தார்
இந்நா ளிவ்வேள் வின்முறியார்
ஏய்ந்த பெருங்காற் றைத்தொலைத்தார்
இன்றிவ் விளங்காற் றைத்தொலையார்
தக்க வெருதேழ் தழுவவந்தார்
தளிர்மெய்ம் மானைத் தழுவவாரார்
தாரைக் கிறைவன் தனைமுடித்தார்
தாரைக் கிறைவன் தனைமுடியார்
மக்க ளுடனே நூற்றெண்மர்
மகிழ்ந்தே வணங்குந் திருப்பேரை
மழைக்கார் மேனிக் குழைக்காதன்
மானவ நீதன் றென்றாகுமே! (ருக)

வஞ்சித்துறை (மடக்கு)

தருஞ்செவி யுடையார்
மிருஞ்செவி யுடையார்
உகந்தர வணையார்
சுகந்தர வணையார். (ருஉ)

நேரிசை வெண்பா

(மடக்கு)

அணையா ரணங்குக் கணைமகிமை காட்டும்
இணையினெடுங் காத னிணைத்தாள்—புணையாம்
நவமான கோள்போ னவநவமாச் சுற்றும்
பவமாங் கடலாழ் பவர்க்கு. (ருங)

சம்பிரதம்

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

குருவினரு ளாற்ககன முலவுமம் புலிதனைக்
கூடவே சுடச்செய்குவன்
கொடுவெயிலை நிலவாய் வரப்புரிவ னோர்கணங்
கோட்டைவிர லாலழிப்பன்

பருமணிகொ ளாழியைப் பாணியு ளடக்குவன்
பகருமுன் பலகைபிலையான்
பழுருது தூக்குவன் பூச்சிரந் தாங்குவன்
பயோதரங் கைப்பற்றுவன்
பெருவரைக ளோரடிக் குள்ளுறக் காட்டுவன்
பேரங் கிளையக்கசக்கிப்
பிழிந்திடுவ னெந்தலோ கத்தையுஞ் சிறியதோர்
பேழையு ளடக்கி வைப்பன்
அருமையல் விளைவெலாந் தென்றிருப் பேரைவாழ்
அணிநெடிய கன்ன ஞர்தம்
அடிமலர்க் காளலாக் கடவுடனை யும்மொழிவன்
அவைசரம தாகவின்றே. (ருச)

## வண்டுவிடு தூது

### கட்டளைக் கலித்துறை

இன்றேன் பெருகு பொழிற்றிருப் பேரை பெனுநகரிற்
சென்றேயென் மாலை நெடுங்குழை மாலிடஞ் செப்பி,வண்டே!
இன்றே யவன்றன் துழாய்த்தா ரளியுட னெற்களிக்கிற்
பொன்றே னளிபெனும் பேருநிற் கேதகும் பூமிசையே!(ருரு)

### கட்டளைக் கலிப்பா (மடக்கு)

பூம னைத்திரு வாழுநன் மார்பனைப்
பூம னைப்பெற மாயனைப் பூந்துழாய்த்
தாம னைத்திருப் பேரைவை குமபரந்
தாம னைத்துவ ராபதி தன்னிலே
காம னைக்கு ணிறுத்திய வெந்தையைக்
காம னைப்பயந் தானையொ ராயிர
நாம னைக்கண மேனுந்து திக்கிற்சீர்
நாம னைத்து முலகீர்! பெறுவமே. (ருசா)

## ஊசல்

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

உலகமதி லூசலென வந்தே போகும்
ஓயாத பிறப்பிறப்போய்ந் திடவே யென்னுட்
பலகையதிற் பாசமெனும் பாசம் பூட்டி
பங்கயத்தாள் திருப்பேரை வல்லி யென்னும்

இலகுமிரு தேவியரோ டாடி ரூசல்
எழின்மகரக் குழையசைய வாடி ரூசல்
வலமுறுமைம் படையசைய வாடி ரூசல்
மகரநெடுங் குழைக்காத ராடி ரூசல். (ருஎ)

## நெஞ்சுவிடு தூது

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

ஊசிமுனை வேளம்பு துளைத்த துளை
வழியுலவி உயிராங் காற்றைத்
தேசுமணிப் பணவரவ மன்னவிளந்
தென்றலுண் ணுந் தெசையைப் பார்த்தும்
பேசவின்றி யிருத்தல்தகு மோ? நெஞ்சே!
தென்பேரைப் பெருங்கா தன்பால்
ஆசையொடென் காதல்மொழிந் தங்கருட
னோடலங்க லருளாய் நீயே! (ருஅ)

### கலிநிலைத்துறை

நீச குணங்கொ ளுலோபரை யண்டி நிலமீதே
போச மனங்க பூபதி யென்றே புகல்வீர்காள்!
பாச மடைந்தோன் வாசவ னும்பர் பணிபேரை
வாசனை யன்பர் நேசனை யென்றும் மருவீரே! (ருகூ)

## குறம்

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

மருவலர்கள் வெருவவரு ரெகுபதியி னிறைகருணை
மருவுகுகன் மரபி னுறலால்
அருகுறிசொல் குறமினென வறிதியெனை யலர்நென்முறம்
அருணனினை யவனை யெணியென்
அருகினில்வை சிறுவருணா வனமுமிடு பலியும்வலம்
அதிர்குரவி னலமு மடவாய்!
அருணகின காவரையு முணரிலணி நெடியகனர்
அதிவிரைவி னுனையணைவரே! (சுய)

## நிலைமண்டிலாசிரியப்பா

(முதல் ஒன்பது அடிகள், வயலைப் பற்றிய சிலேடை)

ஏர்மிகப் படிதலி னிக்குச் சிலையனும்,
மாவுரஞ் சேர்தலின் வண்டுள வோனும்,
வித்தையே மருவலின் மேலறி வாளருங்,
கமலமன் னுதலிற் காண்டிகை முகனுஞ்,
சங்க முலாவலிற் றனிநா வலரும்,
கதிர்கள் பெறுதலிற் ககன பானுவுங்,
கண்டங் கறுத்தலிற் கண்ணுதற் கடவுளும்,
பலகற் பதித்தலிற் பார்த்திபர் மகுடமும்,
மானுங் கழனி வளங்காண் பதுடன்—

(இது முதல் ஒன்பது அடிகள், சோலையைப் பற்றிய சிலேடை)

சசியை நாடலிற் சதமகன் றானுஞ்,
சாயையெஞ் ஞான்றுஞ் சார்தலி னிரவியும்,
இனக்கிளை சேர்தலி னில்வாழ்க் கையருந்,
தும்பி கலத்தலிற் சுடர்முடி வேந்தரும்,
பூமேற் பிறங்கலிற் பொன்னவள் தானும்,
மணமது மேவலின் மாந்தர்கள் தாமும்,
அரம்பை காண்டலி னமரா வதியும்,
கருமஞ் சார்தலிற் கருமிகள் தாமும்,
பொருவுந் தண்பூம் பொழிலின் வளமும்—

(இது முதல் ஒன்பது வரி, கடம்பாக்குளத்தைப் பற்றிய சிலேடை)

அங்கலை தோய்தலி னரியும் வாணியும்,
அப்பு நிதஞ்சார்ந் தாரியர் தாமும்,
அங்கு வளைசேர்ந் தரிவையர் கரமுஞ்,
சரங்க ணிறைந்தே தரணிபர் தூணியும்,
ஓதிம மடுத்தே யுயர்மலை யரசும்,
பலவா விக்குப் பயந்தர நமனும்,
நற்புளி னங்கள் நாடலி னதியும்,
பன்மத குஞ்சரம் பரவலின் மலையுஞ்,
சிவனுங் கடம்பாச் சீர்த்தட வளமும்—
நீங்காச் செல்வம் நிறைதிருப் பேரை

மாநகர் தனிலே வாழுநூற் றெண்மர்
போற்றவீற் றிருக்கும் பொன்னெடுங் குழையாய்!

தண்கடல் வளைந்த திண்புவி மீது
நான்முகன் வகுத்த நால்வகை யோனி
யெழுவகைத் தோற்றத் ததில்யா னுறினும்
அன்பர் குழாத்திற் கடைந்திடு மிடரை
உடுக்கை யிழந்தவ னுடுத்திடு கரமென

விரைவிற் போக்குன் விரைமலர்த் தாளில்
அன்பொழி யாமை யருள்வர மெனக்கே! (சுக)

## இன்னிசை வெண்பா

கேசவனைக் கோளூர்க் கிடந்தானை நீள்கனனை
வாசவனைக் காத்தருள்செய் வாமனனை யெந்நாளும்
பாசமுற வெண்ணினமன் பாசமிறச் சீரடைந்து
தேசமர்விண் ணூர்பெறலாஞ் சேர்ந்து. (சுஉ)

## தாழிசை

(மடக்கு)

சேர ரும்புன் னகமே சோரு மென்புன் னகமே
செறிய வொன்று மேகமே சிறிய னொன்று மேகமே
எரனங்க னம்புளே சார நொந்தென் கம்புளே
இலங்கு வங்க வேலையே புலம்ப லென்றன் வேலையே
பாரை யுண்ட மாயனூர் பேரை யண்டு மாயனூர்
பருமை யம்பு யங்களு மிருக ணம்பு யங்களுஞ்
சீர தார விம்பமு மோர் வதன விம்பமுந்
தெள்ளியவெ னுள்ளமே சென்று கொள்ளை கொள்ளுமே!

## கட்டளைக் கலித்துறை

கொண்டல் தவழு மணிமாட மேவுங் கொடிகளுஞ்,சீர்
கொண்ட முனிவரு, மம்பர நாடுங் குருகைப்பிரான்
கண்டரும் பாட லுகந்ததென் பேரையிற் காகுத்தனைக்
கண்ட வனிதையர் கொள்வார் கடலெனக் காதலையே!(சுச)

## எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

காத லுடன்றழல்போ லாதவன் மேனிசுடக்
கானன் மலிந்தவிவண் மானென நொந்தனைநீ
மாதர சேயினமோர் காத முறிற்றெரிவாய்
மாடுநவ் முத்துறையுங் கூடுபு னற்றுறையுஞ்
சீத மலர்த்தடமுஞ் சோதி மதிற்றடமுஞ்
சிகரநல் வீடுகளும் நகர்மணல் மேடுகளும்
வேத னிலங்குழையார் மேவு நெடுங்குழையார்
மின்புயல் வண்ணமுமே பின்பவ ரெண்ணமுமே! (சுரு)

## குறள் வெண்செந்துறை

எண்க ணாற்கு மெரிக்கணாற் கும்பல
எண்க ணாற்கு மிறைகுழைக் காதனே. (சுசு)

## கொச்சகக் கலிப்பா

காதிசுத னுமுனிவன் காட்டுஞ் சிலையதனை
மாதுவடி வாச்செய் மலர்ப்பதமென் னெஞ்சுறவே
நீதயவி னோடருள்வாய் நீதா!கு ழைக்காதா!
மேதினியோர் மெச்சும் விதுரன் குடிலெனவே. (சுஎ)

## மறம்

## பதினொன்குசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

குடிகளி லாசை யுடனில மாண்ட
கோமகன் றிருமுகந் தனக்கே
கொடிபுரை நும்மா தினைநல்கு மென்னக்
குழறிய மொழியினைக் கேட்டுங்
கொடியினைப் பட்ட முடியபா சனுக்குக்
கொடுப்பமோ கொணர்திரு முகந்தான்
கொடுத்திடி லெம்மா தினைநுகர்ந் திடுமோ
கூறுதி பாரதி பதியின்
வடிவமே யமைந்த திருமுக மென்றே
வழுத்தினேன் முகமெண்க ணிலைகாண்!
மன்னுசக் கிரியின் றிருமுக மெனினோ
மான்மதக் குறியினைக் காணோம்

படிபுகழ் புலவோர் வாழ்திருப் பேரை
பதியுறு மறவரென் றறியாய்,
பையல்க ளறிந்தா னையவே புடைப்பார்
பயனிலை தூதநீ யோடே! (சு௮)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

தூது நடந்தும் புரமெரித்துந் துங்க விராமன் றனைச்சுமந்தும்
தீதுசெய் தக்கன் றனையழித்துஞ் சிவன்றா னெனத்தோன் றநுமான்றேள்
மீதுபி றங்குன் சேவைகண்டிம் மின்னா ளுன்மேன் மயல்கொண்டாள்
ஆதலிற் றென்பே ரைக்கிறைவா! அணைவா யிவளை யணைவாயே! (சுக)

## கட்டளைக் கலிப்பா

(மடக்கு)

அணிவ யற்றிருப் பேரையெம் மாதவன்
அமர ருக்கமு தீந்தருண் மாதவன்
பணிவு டன்வனத் தேதிரி மாதவன்
பத்தர் தந்தம நீக்கவு மாதவன்
துணிவு வானர மன்னவன் றுணையே
துரோப தைக்கிட் டதுமுன் றுணையே
அணுகிக் கா!வென் றழைத்ததன் றுணையே
அண்டி மேய்த்த தடவிசென் றுணையே. (எ0)

## நேரிசைச் சிந்தியல் வெண்பா

ஆனிரைமுன் மேய்த்த வழகன் குழைக்காதன்
தேனி னினிய திருநாமந்—தானவனி
மானவர்க்கெந் நோய்க்கு மருந்து. (எக)

## இரங்கல்

வஞ்சி விருத்தம் (மடக்கு)

அருவு மவன்றனை யென்காதன்
மருவி லனந்த மணிக்காதன்
இருமயல் தந்தினி யிப்போதே
பருகு மதன்பக ழிப்போதே. (எ௨)

## இதுவும் இரங்கல்

### கலிநிலைத்துறை

போதுட னண்டும் போர்மத னம்பின் பொழிவாலே
போத மகன்றுங் காத லடைந்தும் புலர்வேனோ?
சீத மலிர்ந்துந் தாது செறிந்துந் திகழ்காவான்
காதி விளங்கும் பேரை யிலங்குங் கனமாலே! (எங)

### கட்டளைக் கலித்துறை

மாலத் திரும்பொழிற் றென்பேரை மாயன் வரையதனிற்
காலத் தலர்கஞ்சஞ் செவ்வாம்பல் சங்கு கருங்குவளை
சாலத் திகழும் வரால்கோகம் வள்ளைநற் சைவலஞ்சேர்
கோலத் தடக்கொடி காணவென் னெஞ்சங் குழைகின்றதே!

### தாழிசை (மடக்கு)

குழலி ருண்ட கந்தரங் குமுறு சங்கு கந்தரம்
கொங்கை துங்க மந்தரங் குறைம ருங்கு மந்தரம்
கழலி ரண்டு மம்புயங் கழைக னென்ப வம்புயங்
கடலகன்ற வம்பகங் ககன மான்கு ரம்பகம்
எழல்செ யுஞ்சொற் றீங்கன லென்று மோகத் தீங்கனல்
ஏய்ந்து வீயும் புலவரே யிம்ப ரோடும் புலவரே
தொழுநெ ருங்கு மாயனைத் துலங்கு பேரை மாயனைத்
துதியு மின்னல் மாயுமே சொல்வ தின்ன மாயுமே. (எ௫)

## இரங்கல்

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியச் சந்த விருத்தம்

இன்னலை யைங்கணை மன்னவ னுஞ்செய வென்னிலை சந்தினிலே
என்னுடை பைங்கிளி யன்ன மிலங்களி யென்ன் மொழிந்திடுமோ?
பொன்னுறு குண்டல மன்னு நெடுங்கனர் பொன்னவ ளின்பிரியர்
என்னை யணைந்தித ழின்னமு தங்கொள வின்னமும் வந்திலரே.

### ஊர்

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியச் சந்த விருத்தம்

இரும் பணிக்கேது நிருபன் குலத்தோடும்
இயமன் புரத்தேக வொருபாகாய்
வலமுந் துறத்தீர் விசயன் திருத்தேரில்
மருவுங் குழைக்காதர் பதிகேளீர்!

மலயம் பெறச்சாரு நதியின் சலத்தோடு
மணமிஞ் சலர்ச்சோலை மலிதேறல்
வெலவின் கனிச்சாறு பழனந் தனிற்பாய
விளைதென் றிருப்பேரை நகர்தானே. (எஎ)

## பிச்சியார்

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

தானம் பெருகும் புகர்மாவின் தந்த மிறுத்த குழைக்காதன்
தங்க மலைதோய் மங்குலெனத் தனிப்புள் ளரசன் புயத்திலகு
மீன விழாவின் சேவைதனை விரும்பி யரன்போற் செம்பணியும்
வெண்ணீ றேடுஞ் சூலமுமே மேவிப் பாவும் பிச்சியரே!
ஆனந் தங்கொள நல்வேளை யடைந்தீ ரங்கங் குளத்திருக்கை
அணுவும் வெளியிற் காட்டுவிரே லாசைப் புரமே நாசமதாம்
ஈனம தன்று தனமலிந்த வெனைநீ ருமையா ளெனக்கருதும்
என்னை யிங்கனம் நீர்பெறலா மினிமே லையந் தவிர்வீரே!(எஅ)

## கொற்றியார்

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

வீசுகந்த வனமாலை யுளந்தனிலுங்
களந்தனிலும் விளங்கச் செய்து
பாசுரத்தாற் பதின்மர்புகழ் திருப்பதியும்
பலதொழுது பழனப் பேரை
வாசமுறு கொற்றியரே! நீரடைந்த
சமயநன்று மகிழ்ந்திப் போதே
காசினியி லும்மொடுயான் கூடலுற
அழகரைநீர் காட்டு வீரே! (எகூ)

## சந்திரோபாலம்பனம்

வேற்றொலி வெண்டுறை

காதலுடை யின்பதியும் பற்குனனும் வாழ்வுறச்சக் காத்தா லன்று
சோதிவலி பெற்றவனும் வெய்யவன்றன் பலகரங்கள் தொலையச்செய்த
காதலன் தென்றிருப் பேரைக் காவலன்
நீதியில் லாமலுன் னீள்க ரந்த னைற்
சூதமென் கொங்கையைத் தொட்ட செய்தியைக்
காதுறு முன்மதி! கரந்து செல்வையே! (அ0)

## கார்காலம்

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்
(மடக்கு)

வையமதில் மழைபொழிகார் மின்னல்விடுங் காலம்
　　மனைவியரைச் சேர்ந்தவரு மின்னல்விடுங் காலம்
மையளிபோற் சம்புவினிற் பழமுதிருங் காலம்
　　மதன்துயரம் விரகியர்முன் பழமுதிருங் காலம்
ஐயமற மருதவினம் பூத்தவிருங் காலம்
　　ஆறுகுளம் நீத்தமதாற் பூத்தவிருங் காலம்
செய்யசிறை விரித்தேகே கயந்தி கழுங் காலம்
　　திருக்கனரை யான் பிரிந்தே கயந்திகழுங் காலம். (அக)

## வலைச்சியார்

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

காலைமீன் விற்கும் பேரைக் கடைத்தெரு வலைச்சி யாரே!
மாலையா னடைய வுங்கண் வாளையு மதித்தே னிந்தச்
சேலையுந் தூக்கிக் காட்டிச் சேர்ந்திடும் பலத்தைக் கூற
மேலுமெம் முதலை யீவேன் விலையின்முத் தமுங்கொள் வீரே!

### கட்டளைக் கலித்துறை

வீர வரிதுயில் பாற்கட லோதிரு விண்ணகரோ
காரமர் சோலை விடைமலை யோகன போகிகள்சேர்
சார வனந்த புரமோ முகிலினந் தண்பொழில்வாய்
ஊரழ கார்தென் றிருப்பேரை யோவிந்த வொண்கொடிக்கே!

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

கொடியராம் யமபடர் மடியுமா றெனதுயிர்
　　கொள்ளைசெய் தருணமு முள்ளமே! நீவிடேல்
படியளந் தேதிகழ் நெடியவா மடிகளும்
　　பரவுபொன் னுடையுநற் கரமுமைம் படைகளும்
துடியிடைக் கஞ்சமின் படியுநன் னெஞ்சமுந்
　　தோய்குழைக் கன்னமும் வாயெழிற் கன்னமும்
முடிவில்சீர்ப் பேரையார் கடிமலர்க் கண்களும்
　　முகசரோ சமுமதை நகரவிச் சிகையுமே. (அச)

### நேரிசை வெண்பா

சிகரமணி மாடத் திருப்பேரை வாழும்
மகரநெடுங் கன்னு! வரதா!—பகருமளிப்
பார்ப்பார்க்கும் பூநிகருன் பாதநினை யாதே நூல்
பார்ப்பார்க்கிங் கென்னும் பலன். (௮௫)

## இடைச்சியார்

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

பலவிடையர் முதலானோர் பணிவிடைய ராகிப்
பணிகனகக் கலையிடையர் குலவிடையர் தங்கள்
குலமரபி னிடைமருவு மடமகளிர் மணியே!
கூடுபுனற் றென்பேரை நீடுதெருக் களிலே
அலைதருநீ யருந்ததியென் றேபகரக் கேட்டுன்
ஆடைபடி குசக்கலசத் ததியாசை கொண்டேன்
கனைநெல்குவேன் அவையளித்தென் னகமுறவே செய்தாற்
களவதிட்ட னெனவெனையே கணந்தெரிவாய் நீயே!

## கழிக்கரைப் புலம்பல்

### பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

(மடக்கு)

தெரிந்தோர் மதிக்கும் பயப்படவே
செனித்தேன் மதிக்கும் பயப்படவே;
சிறைப்பா லனமே யருந்தேனே
திகைப்பா லனமே யருந்தேனே;
மருவேள் போதே யஞ்சுறவே
மாய்விப் போதே யஞ்சுறவே;
மணலாற் றலையுந் தினமணியே
வருகாற் றலையுந் தினமணியே;
பெருவா னுகமா மரைக்கணமே
பிரிவா னுகமா மரைக்கணமே;
பிறங்கும் பவளம் பொருந்திடரே
பிறரின் பவளம் பொருந்திடரே;

அரவம் படிமே னித்திரையே
அடையேன் படிமே னித்திரையே;
அழைமா செவிசா ரப்பனையே
அணிமா செவிசா ரப்பனையே. (அஎ)

## சுரம்

### கட்டளைக் கலித்துறை

சாரச நாடு மெகினத்தின் றாவியுந் தண்ணளிச்சத்
தாரு மலரும் படவடுக் காண்மெல் லடியிளமான்
பேரையி லெங்ஙனஞ் செல்லும் வடவை பெரும்பயமுஞ்
சூரிய னென்று மலைவாயு மேவுஞ் சுரங்கடந்தே. (அஅ)

## பாண்

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

சுரமிசை யாழி னிசையினு மினிய
சுருதியின் கானங்கொள் பேரைப்
புரமதி லியார்க்குங் கைக்குநின் பாடல்
பொன்னெடுங் குழையரென் றுதர்
வரவிலை மாறூர் தனவரை யடைந்தார்
வருமுன்சொற் கணிகையார் பாற்செல்
பரவிய தைய விராகநன் குணராய்
பாண! நின் பாடலங் கோதே! (அகூ)

## தாழிசை

அங்கண் ஞாலமிசை யிந்த நாளதனி லருமை யானகவி வாணரை
ஆதரிப் பவர்க ளில்லை யென்பது மவர்க்கு நீவரத னென்பதும்
இங்கி யானனி யுணர்ந்து மற்பரிட மிலவு காத்தகிளி யென்னவே
யெய்தி யின்கவிதை பாட வண்டுமிடி யெற்கு நமலருள் செய்குவாய்!
தங்க மாயவிரு மருத மாகிவளர் சுதர்கள் சாபம தொழித்திடுந்
தொன்மையெண்ணியள கேசனும்பலி தொலைத்தகால முநமீந்ததால்
தங்க மாமலைவில் வங்கமாயகிரி சாரு மாதவனு மண்டருஞ்
சாணிதம் பணிய வணுகு பேரையுறு தருவை நேர்திருவி றுதனே.

குறளடி வஞ்சிப்பா

திருவின்மணிச் சிகரந்தனில்
விண்கேசரி பண்பாயுறக்
கண்டேபிடிக் கரியோடிட
கனியரம்பை நனியிரிய
குறமகளி ரெறிகவண்கலால்
தீந்தேனிறாற் பேர்ந்துடைய
அருவிமதுப் பெருகிவர
கற்கடகம் பொற்குவடுற
குலமந்திகள் சிலைவந்தருக்
கோடதனிற் சாடிடவுங்
கலயமுனி நிலயமெனத்
தெரிந்தேசுரர் சொரிந்தனரென
விதமாமலர் சிதறுபுவிழ
சாஅலமணக் காஅலுலவப்
பலவின்கனி நிலமீதுற
வேய்முத்தினம் விண்மீனென
இலகுந்தட மலயந்தனிற்
கார்பொழியச் சீர்வழுதி
நன்னாடணி பொன்னாடென
மதிக்கமிகத் திதித்தவெள்ளம்
மணமினென வணையினிதம்
மருவிவரும் பொருநைநதித்
துறைவ! பேரைக் கிறைவ!வுன்றன்
திருவடி
நவமா மலரதை நாடினன்
பவமா மாயைப் பற்றறுத் தருளே! (கக)

## பனிக்காலம்

நேரிசை வெண்பா

அருணன் றனுவி லமரவிம வாடை
அருண விதழிரண மாக்க—வருவதனால்
இங்காலம் போன்றதெனக் கிக்கால மாதலிற்சேர்
சங்காழி சார்குழைக்கா தா! (கஉ)

## இளவேனிற் காலம்

### எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

தாரணியின் மாவிலைகொண் டங்கங் கோலந்
தனைக்காட்டி வேசையர்போற் குயில்கள் கூவ
தாரணிபூங் குழலன்னார் தனங்க ளென்னச்
சந்தனநன் னகம்படிந்து வாணி போலச்
சீரண்மபூ வாசனையே மேவி மாரன்
தேருலவ வன்பாயவ் வனமே மன்னி
பேரையுறு நாத!நின் போற் றருக்க ளெல்லாம்
பிறங்குமிந்த வசந்தமதிற் பிரித னன்றே! (கூஙு)

## பூவை விடுதூது

### ஆசிரியத் தாழிசை

(மடக்கு)

பிரியனென் றணைந்தெனைப் பிரிய வேகிய
அரியவொண் குன்ழயுறு மரியைப் பூவையே!
தெரியலில் வரவுன்ர தெரிய லோடுமே! (கூச)

## வெறிவிலக்கு

### கட்டளைக் கலிப்பா

ஓடு காவிர தன்கணைப் பூவினால்
உற்ற நோய்க்கு மருத்துவர் பற்பலர்
நீடு காலந் தொழுந்திருப் பேரைவாழ்
நெடிய காதன் மருந்தண்டார்க் கீந்திடும்
பீடு ளானிடஞ் சேர்த்திந்தப் பாவையைப்
பிழைப்பியாம லல்கைக் கெடுத்திடப்
பாடி யாடி மடவீரிவ் வாவிசேர்
பங்க யத்தை யழிப்பது பாவமே! (கூரு)

## உருவெளிப்பாடு

பாகொடு மொழிதல்:
கட்டளைக் கலித்துறை

பாவலர் போற்றுந் திருப்பேரை மாயன் பருப்பதத்திற்
றேவர் மதித்திடு மாதலி போன்றபொற் றேர்வலவா!
மேவு மரம்பை வடுப்படு சூதம் மிளிர்கமுகு
பாவன நற்குள மால்காண லாவிது பாலையன்றே! (௬௫)

## தழை

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

பாலனைக் காக்கத் தூணிற் பவித்தசெதன் பேரை நாத!
சோலையுன் றழையை யீந்தேன் றுதிக்கையோ டெடுத்துக் கண்ணிற்
சீலமா யொற்றிப் பின்னுந் திகழுமங் குசக்கும் பத்தின்
மேலணைத் திடமா தங்க விரகநோய் தீர்ந்த தின்றே! (௬௭)

## மன்மதோபாலம்பனம்

விருத்தக் கலித்துறை

தீராத வெந்நோயு மன்பர்க் கொழிக்குந் திருப்பேரைவாழ்
நாரா யணன்பூ தரத்திண் புயத்தார் நறுந்தாரினைச்
சீராக யாம்பெற்ற பின்னுன் கரத்திற் செறிபூச்சரத்
தாராசை கொள்வார் மதப்பைய லேபோநின் னலமொடுமே.

எண்சீர்க் கழிநெடிலடியாசிரிய
விருத்தம்

அலரிகுலத் தயரதற்கு மைந்த னாக
அவதரித்து வீடணனைச் சிரம்பத் தானைத்
தலமதிலே முடிதலையுற் றுனென் றுருஞ்
சாற்றவரி சிலைகுனித்த வீரன் றன்னை
நிலமகளி னலவதன மிதுவோ வென்ன
நிறைந்தபொழிற் பாண்டியநாட் டழகார் நெற்றித்
திலதமெனப் பலவளத்தோ டிலகுஞ் சீர்த்தென்
திருப்பேரை மாநகருட் கண்டேன் யானே! (௬௬)

### கட்டளைக் கலித்துறை

கண்டமெய்ஞ் ஞானிய ராங்கே கயத்திற்குங் காண்பவமாந்
தெண்டிரை யாழ்பவர் நற்கதி யாங்கரை சேர்வதற்கும்
மண்டலந் தன்னிலம் போதம தாகு மலர்ந்தவிரும்
புண்டரி கம்புரை தென்பேரை மாதவர் பூங்கழலே! (௱)

---

திருப்பேரைக் கலம்பகம் முற்றும்.

வாழ்க!

ஸ்ரீ மகரநெடுங் குழைக்காதர் திருவடிகளே சரணம்

திருப்பேரைத் தாயார் சகாயம்

ஸ்ரீ

# திருப்பேரைக் கலம்பகம்

## அரும்பொருள் விளக்கம்

திருப்பேரை - தென்திருப்பேரை. இஃது நூற்றெட்டுத் திவ்ய தேசங்களுள் ஒன்று. ஸ்ரீ நம்மாழ்வார் பாடல்பெற்றது. கலம்பகம்-கலப்புள்ளது: இஃது ஒருவகைப் பிரபந்தம். இதன் இலக்கணமாவது:- ஒரு போகும், வெண்பாவும், கட்டளைக் கலித்துறையும் முதற் கவியுறுப்பாக முதலிற் கூறி புயவகுப்பு, மதங்கு, அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்னும் இப்பதினெட்டு உறுப்புக்களும், காலத்தால் மருவிய பிச்சியார், கொற்றியார், வலைச்சியார், இடைச்சியார் முதலியனவும் இயைய மடக்கு, மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், கலித் தாழிசை, வஞ்சி விருத்தம், வஞ்சித்துறை, வெண்டுறை முதலியவற்றோடு இடையிடையே வெண்பாவும், கலித்துறையும் விரவிவர அந்தாதித் தொடையால் முடிவுறப் பாடும் போது தேவர்க்கு நூறும் அந்தணர்க்குத் தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத் தொண்ணூறும், வைசியர்க்கு ஐம்பதும், சூத்திரர்க்கு முப்பதுமாகப் பாடப்படுவாகிய ஓர் பிரபந்தம்.

'திருப்பேரை' யென்னும் இத்தலம், திருவாய்மொழி-ஏழாம் பத்து மூன்றாந் திருவாய்மொழியில், 'வெள்ளைச் சுரிசங்கு' என்னும் பதிகமான நம்மாழ்வார் பாடலும், திருமொழியில் ஏழாம் பத்து மூன்றும் திருப்பதிகம் "மகரநெடுங் குழைக்காதனை" யென்ற திருமங்கை யாழ்வார் பாடலும் பெற்றது.

"அரசாகி வையமுழு தாண்டலு மின்பக்
கரைசார மாட்டார்கள் காண்மின்— முரசாரும்
தென்றிருப்பே ரைப்பதியான் சீர்கேட்டு நாவிலவன்
தன்றிருப்பே ரைப்பதியா தார்." * * * என்ற

ஸ்ரீ பிள்ளைப்பெருமாளையங்கார் திருப்பாடலும் பெற்றது.

இத்தலத்திற்குப் பூர்வத்தில் 'ஹரிபத க்ஷேத்திரம்' என்று பெயர். பூமிதேவி, திருமகளின் சரீரத்தை வகித்துப் பொருநைக் கரையிலிருந்து தவஞ் செய்கையில், திருமஞ்சனத் துறையிலே அவள்பால் அகப்பட்ட மகர குண்டலங்களை யணியத் தக்க நெடிய காது உளனாக வந்த மகரநெடுங் குழைக்காதனாகிய திருமாலை அப் பூமிதேவி காதலித்துக் குண்டலத்தைச் சாத்தி மணந்து இன்புற்றனள் என்பது இத்தல வரலாறு.

ஸ்தல விமானம்-புஷ்கர விமானம்; தீர்த்தம்-மாகரிகஸமுக தீர்த்தம்.

## காப்பு

காப்பு-காத்தல். இது காத்தருளும் கடவுள் விஷயமான வணக்கத்துக்குத் தொழிலாகு பெயர். கவி - தாமெடுத்த நூல் இனிது முடியும் பொருட்டு ஆன்றோர் வழக்கப்படி, வழிபடு கடவுளையாவது ஏற்புடைக் கடவுளையாவது வணங்குவது.

(க) இச்செய்யுள் நம்மாழ்வார் விஷயமானது. வழிபடு கடவுள் வணக்கத்தின் பாற்படும். அடியாரை வணங்குவதும் அவ்வித வணக்கமேயாகும்.

பூமாது-திருமகள்; புவிமகள். தென்திருப்பேரை—பாட்டுடைத் தலைவன் எழுந்தருளிய திவ்ய ஸ்தலம். தென்-அழகு, ஸ்ரீயினுடைய பேரத்தை (சரீரத்தை) வகித்துப் புவிமகள் இத்தலத்தில் தவஞ்செய்து இஷ்ட பலனடைந்ததாக இத்தல புராணம் கூறும். அப்புவிமகளுக்கு வடமொழியில் 'ஸ்ரீபேரா' (ஸ்ரீ—லக்ஷ்மீ, பேரா—சரீரம்) என்று பெயர். ஸ்ரீபேரா—திருப்பேரை; மாமால்—திருமால்; மகரநெடுங் குழைக்காதன்—தென் திருப்பேரையில் எழுந்தருளிய பெருமாள். மகரமீன் வடிவமான ஓர் காதணி விசேடத்தையுடைய நெடிய காதன் (மகரகுண்டலக் காதன்). இவனே இப் பிரபந்தத்தின் தலைவன். கலம்பகம்-கலப்பாயமைந்த பாமாலை. பரிந்த அரண்-கிருபையோடு கூடிய ரட்சை. தேமா-தித்திப்பு மாமரம். குருகைப் பிரான்-குருகை யென்னும் ஆழ்வார்திருநகரியில் அவதரித்த நம்மாழ்வார்.

"சீரெழுத்துப் பொன்பூ திருமணிநீர் திங்கள்சொல்
கார்பரிதி யானை கடலுலகம்—தேர்மலைமா
கங்கை நிலம்பிறவும் காண்டகைய முன்மொழிக்கு
மங்கலமாச் சொல்லின் வகை"

என்ற பாட்டியல் விதியின்படி இந்நூல் "பூ" என்னும் மங்கலச் சொல்லால் தொடங்குகின்றது.

(உ) கலியன் - திருமங்கை யாழ்வார், கோதை - ஆண்டாள், பட்டர்பிரான்-பெரியாழ்வார், பூப்புரந்தான்-குலசேகர ஆழ்வார், பொன் அளி-பொன் வண்டு, குருகாபுரியோன்-நம்மாழ்வார்.

(௩) உடையவர் - பாஷ்யகாரராகிய ஸ்ரீ ராமாநுஜர், மதவேள் கரவேழம்—மன்மதன் கையிலுள்ளதாகிய வேழம்(கரும்பு), புறமதமாம் கரவேழம்—இதர புறச் சமயங்களாகிய கரத்தையுடைய யானை, வேழம்—கரும்பு-யானை இரண்டுக்கும் பெயர். சீயர்-சிங்கம் போன்றவர், மதவேள் கர வேழத்தையும், புறமதமாம் கரவேழத்தையும் பகைத்து ஈர்த்திடும் சீயரென்க. யானைகளை அழிக்கவல்ல சிங்கம் என்பது நயம். பூதூர்-ஸ்ரீபெரும்பூதூர்.

(ச) மா மகிழ்—திருமகள் மகிழ்கின்ற, மாறன் (மால் + தன்)-திருமாலினுடைய; மாமகிழ்மாறன்—பெருமையுற்ற வகுளமாலையையுடைய நம்மாழ்வார், நம் தாரணியர் - இப்பூலோக மாந்தர். நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழியின் ஒவ்வோர் பதிகத்தின் சாரத்தை ஒவ்வொரு வெண்பாவில் அமைத்து, நூறு பதிகத்துக்கும் நூறு செய்யுள் கொண்ட "திருவாய்மொழி நூற்றந்தாதி" யென்னும் பிரபந்தத்தை மணவாள மாமுனிவர் பாடினர். அரண்-பாதுகாவல்.

(ரு) வரமங்கையூர் — வானமாமலை (நான்குநேரி); 23-வது பட்டம்-ஸ்ரீ பரமஹம்ஸேத்யாதி சின்னச் சடகோப ராமாநுஜஜீயர் ஸ்வாமி, உள்தமம்-மனவிருள். சிட்டர்கட் கொப்பந்தம் அடியேனுக்கும் மனவிருளைப் போக்கியருளிய என்க. இறையும்-கொஞ்சமும், கட்டம்-கஷ்டம், உகம் மலர்த்தாள்-இரண்டு பாதாரவிந்தங்கள்.

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

(சு) அவையடக்கமாவது — நூலாசிரியர் கற்றோர் குழுமிய அவையில் தம்மியல்பை வெளியிட்டு அடங்கிப் பேசுதல். நம் மாழ்வாரது கவிகளை அங்கீகரித்தருளிய திருச்செவிகளையுடைய திருமால் என் அற்பப் பாக்களையும் அங்கீகரித்தருள்வன் என்க. நெடுங்காதன்-மகரநெடுங் குழைக்காதன். இந்நூலில் வரும் பல பாடல்களில் நீள் கன்னன், நெடுங்கன்னன் என்று தம் அருமைக் குழைக்காதரை ஆசிரியர் அழைத்துள்ளார். பரத்துவாச முனி வன் விருந்தை இராமாவதாரத்தில் உகந்தான். காட்டில் வாழ்ந்த 'சவரி' யென்னும் வேட்டுவிச்சியின் எச்சிலாகிய பழங்களையும் இராமாவதாரத்தில் உண்டான். அதுபோலக் குற்றமிகும் எனது புன்பாவும் ஏற்பன் என்றவாறு.

## நூல்

(க) **தரவு:** பாற்கடலிற் பிறந்தமணி-கௌஸ்துப மணி. அம் சுதரிசனம் எனப் பிரிக்க. அஞ்சுபடை-பஞ்சாயுதம், (பகைவர்) அஞ்சத்தக்க ஆயுதமுமாம். மருவலர்-(மரு + அலர்) வாசனை பொருந்திய பூக்கள். தானவர் மருவலர்—அசுரர்க்குப் பகைவ ரான தேவர்; ஆதிவருணர்-முதற் சாதியாரான பூசுரர்; பொருநை-தாமிரவருணி நதி; விபுதர் தனிநகர் - அமராவதி; பொன் பொருப்பு வரைவாய் - மேருமலையின் அழகைப் பொருந்திய; புட்கர விமானம்-ஸ்தல விமானத்தின் பெயர். வனமுகில்-நீருண்ட மேகம். அழகிய மேகமுமாம்.

**தாழிசை:** மகிமை பொற்பு ஓத விரிவினை - மகிமையாகிய அழகிய கடலின் பரப்பை, அற்பப் போதன்-சிற்றறிவுடைய நான், விட்டுணு-ஸர்வவியாபி, பாலத் துருவன் - உத்தானபாத ராஜாவின் புத்திரன்; தமாலத்துருவன்-(தமாலத்து + உருவன்) தமாலமென்னும் மரத்தின் இலைபோன்ற நிறம் உடையவன்.

**அராகம்:** எழும்-எழுகின்ற, எழுவிடை - ஏழு எருதுகளை, பின்னைப் பிராட்டிக்காக இளஏறு ஏழும் தழுவினை. இருகடவுளர்-குபேர புத்திரர்களாகிய நளகூபர மணிக்கிரீவர். கடம்-மதம், களிறு-கஜேந்திரன், அரவு-காளியன், சடசட-இரட்டைக்கிளவி.

பெயர்த்துந் தாழிசை: முண்டகன் - பிரமன், முண்டகம்-தாமரைப்பூ, அண்டர் இலம்-ஆயர் வீடு; பாதம்பெற வரும் அக்கங்கை என்பது—திருமாலின் திருவடியிலிருந்து கங்கை பிறந்த வரலாற்றை அடக்கிக் கூறியவாறு.

அம்போதரங்கம்: எரி-அக்கினி; வளி-காற்று; அரிவை-பெண்; புவி-பூமி; அலி-ஆண் பெண் அல்லாதது; மதித்தனை-கடைந்தாய்; சிலை-கல், வில்; திதிசுதர்-திதியின் புதல்வரான அசுரர்; நிசிசரர்-இராத்திரியிற் சஞ்சரிப்பவர் - அரக்கர்; இடர் - துயர், தெருள்-அறிவு; சவி-ஒளி, முருகு-இளமை.

சுரிதகம்: அம்புதி-கடல், அம்புவி-பூமி, தேசு-ஒளி, தானமா-மத ஜலமுடைய யானை, இனன்-இனத்தான், சூரியன்; அன்ன வேதன்-அன்னப் புள்ளுடைய பிரமன், குழை நெடுங்கன்ற-குழைக்காதனே;

இங்குக்கூறிய வரலாறு:— அரக்கரைவென்று திரும்பிய ஜயராமனுல், சோழ தேசத்தில் காவிரிப் பக்கத்தில் பதினெட்டு ஊர்கள் தலவகார ஸாமவேதிகளுக்குத் தானம் பண்ணப் பெற்றன; அவற்றில் வாழ்ந்து வந்தவர்களிலே நூற்றெண்மர் சுந்தர பாண்டிய அரசன் வேண்டுகோளுக் கிணங்கித் தென்திருப் பேரைக்கு வந்து குடியேறினர்; அந்நூற்றெண்மருள் குழைக் காதரும் ஒருவராய்த் திகழ்கின்றனரென்பது. கானம் மா இசை-சாமகானம்.

(உ) ஆவும்-பயம் விட (பாலைச் சொரிய); கனங்களும்-பயம் விட (நீரைச் சொரிய); ஆயர்களும்-பயம் விட (அச்சத்தை ஒழிய); ஆ-பசு, கனம்-மேகம், கணம்-க்ஷணம்; கவித்தார்-குடையாகக் கவிழ்த்தருளியவர், கருக்குழியில் சேரா வ(ண்)ணம் கவி தார் (பாமாலை) சொல்வாய்.

(ங) வாய்-பொருந்திய, ஆதவன்மதி-சூரியசந்திரர்; காயாதவன்-காயாதுவின் புதல்வனை பிரகலாதன்; பாய் யாதவன்; பாவங்கள் தீப் பாய்ந்த வன்பஞ்சு ஆகும் என்க. இச் செய்யுள் முற்றும் முரண் தொடை.

(ச) வங்கம்-கப்பல், அம்பு-ஜலம், உண்டு அதிரும் மங்குல்-(நீர்) குடித்து முழங்கும் மேகம், மின்; திருமகளுக்கு உவமை. அங்கம்-மார்பு, வில்சோமன்-ஒளிபொருந்திய சந்திரன். தெங்கு முதலிய விருக்ஷங்களின் மேல் ஆகாச கங்கையும், சந்திரனும் படிதலால் அவை சிவனை ஒக்கும் என்க.

(ரு) ஈர் ஆர் சகடு-ஊர் முழுதும் சுற்றும் வண்டிகள், உருள்-சக்கரம், பவமாம் மகராலயம்-பிறவிக்கடல், மகராயதகருணன்-மகரநெடுங் குழைக்காதன், மதிபோல் ஒளிர் வளை கரன் என்க; வளை-சங்கு, கரன்-கையினன்.

(சா) மடக்கு-வந்த எழுத்துத் தொடர்களே திரும்ப வந்து, வேறு பொருள் படுதல். இது ஒரு வகைச் சொல்லணி. கரத் திகிரியான்-கிரணம் பொருந்திய சக்கராயுதமுடையவன், கையில் (கோவர்த்தன) கிரியையுடையவன்; கரம்-கிரணம், கை. திகிரி--சக்கரம், மலை. காது உவணத்தான் - பகைவரை மோதுகின்ற கருடனை உடையவன், காது வணத்தான் - காதழகுடையவன், வண்ம்-(வண்ணம்) அழகு; திரு துவரையான்-அழகிய துவாரகாபுரியை யுடையவன், திருத்து வரையான் - (வரை-மூங்கில்) புல்லாங்குழலாகத் திருத்திய மூங்கிலை யுடையவன்; சீர் அங்கத்தான் - சிறந்த திருமேனியை யுடையவன், சீரங்க மென்னும் சிறப்பு வாய்ந்த திவ்விய தேசமுடையவன்; உருக்குமணியான்-(பாரியான) உருக்குமணியை யுடையவன், (மனத்தை) உருக்கும் அணி அழகையுடையவன்; ஓங்காரத்தான்-பிரணவ ஸ்வரூபன், விளங்குகின்ற ஆரமுடையவன்; திரு கமலத்தான் - நாபீ கமலத்தான் (பத்பநாபன்), திருக்கு - நயனம், அமலத்தான் - நிர்மலமானவன்; திருப்பேரையான்–திரு - மேன்மை, பேர் ஐயான் - திருநாம அழகுடையவன், ஐ-அழகு, பெரிய அழகுடையவ னெனினுமாம், திருப்பேரை யென்னும் தலத்துக்குரியவன்.

(எ) வலி-வல்லீ - திருப்பேரைத் தாயார்; பிங்கலம்-பொன், பேரன்-சரீரத்தையுடையவன், பிங்கலப் பேரன் - இரணியன்; பீதகம் - பொன், திரியம்பகச்சேதி நிருபன் – முக்கண்ணோடு பிறந்த சிசுபாலன். மாமன்நகரம்-வடமதுரை, காதிய-தாக்கிய, இரவி மைந்தன்-சுக்கிரீவன், தாரை கொழுநன்-வாலி, தந்து

இடை: கலை-நூல் போன்ற நுண்ணிடையில் அணியும் ஆண்டு; தேனினம்-வண்டுக் கூட்டம்; தேனமை-வாசனை பொருந்திய, தொடை-மாலை; மெய்ப்பாமை-சத்யபாமை; பவனம்-வீடு; புஅம் பரம் தரு-பாரிஜாத மரம், சிந்தூரம்-புளியமரம், சுந்தரச் சூரியன்-(வகுள பூஷண)பாஸ்கரனை நம்மாழ்வார், கவிச்சுதை-பாடலாகிய அமுதம், வீரை பொருவும் தடம்-கடலை யொத்த விரிவை யுடைய கடம்பாக்குளம், "கடலிற் பெரிது கடம்பா" என்பது பழமொழி. இக்குளம் தென்திருப்பேரைக் கருகி லுள்ளது.

(அ) புயங்கமலை-சேஷகிரி - திருவேங்கடமலை; போர்ஆனை-போர் செய்கின்ற குவலயாபீடம்; மலை-யுத்தஞ்செய்த; செஞ்சாலிப் பண்ணையில் கமலை நயம் செய்-செந்நெல் வயல்களில் திருமகள் வளம் பெருக அருள் புரிகின்ற;

(கூ) அற்ப மதியாளர்—அற்ப புத்தியுள்ள மனிதர், பிறையைச் சூடிய சங்கரர்; முகுந்தன்-லீலா விபூதியையும் நித்திய விபூதியையும் அருள்பவன்; பெருங் கன்னனென்ன-கொடையில் கர்னனிலும் பெரியவனென, மகரநெடுங் குழைக்காதனென, சொல்லுங் கவிகளை நன்கு கேட்டும் பெரிய காதுடையவனென.

(ம) கவி சோலை மலை—கவிந்த சோலைகளையுடைய கோவர்த்தன கிரி; முன்னம் கவித்தார்—முன்னாளில் (மலையைக் குடையாகக் கவிழ்த்தவர்); கவி வேதியன்-சுக்கிராச்சாரி; முன் அங்கு அவித்தார் எனப் பிரிக்க. பாவைக் களித்தார்-பாடலை யுகந்தார். கனம் மானம் உடை—மகிமை பொருந்திய மானத்தைக் காக்கும் வஸ்திரம். பாவைக்கு(துரோபதைக்கு)அளித்தார் எனப் பிரிக்க. திருப்பேரை - திருநாமத்தை, உற்ருர் - அன்பர், திருப்பேரை உற்ருர்—திருப்பேரை என்னூர் தலத்திலெழுந்தருளினர். கவியால்-குரங்குகளால், கட்ட படுத்தார்-(சேது அணை) கட்டுவதற்காகத் தர்ப்பசயனத்தில் படுத்தார். கட்டப் படுத்தார்-துன்பப் படுத்தார்.

(மக) மாதங்கந்தனை நாடி- 1. மாது அங்கம்தனை நாடி, 2. மா தங்கம் தனை நாடி-பொருளை விரும்பி, 3 மாதங்கம் தனை நாடி-யானை முகத்து விநாயகரை நாடி, 4. மாதம் கந்தனை நாடி-(மாதாந்தம் போதல்). மத யானை தனை வென்று-குவலயாபீடத்தை வென்று;

அரியா-சிம்மமாக, விஷ்ணுவாக; திருப்பேரை - திருநாமத்தை, திருப்பேரைத் தலத்தை; பொற்கலை—பீதாம்பரம்; கலையோடு திகழ்ந்திடும் எம் பெருமானென்னுமிடத்தில் நயங்காண்க; கலை-ஆண்மிருகம்(மான்), மான்—(பெண்)மான்.

(௰௨) நீரதம் சிரோருகம்—மேகம் கூந்தல்; நெடுங்கண் அம் சரோருகம் - (தாமரை); உரோருகம் - ஸ்தனம்; ஒருகப் பொங்கர்-(உகம்-இரண்டு) இரண்டு மலை; வீரை வந்த சுதை-பாற்கடலிற் பிறந்த அமுதம்; அந்தகன் புதல்வர்-குருடன் (திருதராட்டிரன்) மக்கள்; அந்தகன் பக்கமாக-இயமன் பக்கம் சேரும்படி; உள்ளாய பக்கம் - உள் அன்பு (பட்சம்); ஐவர் பாலுற-பாண்டவரிடம் பொருந்த; பாண வெம்மை-அம்பின் சூடு.

(௰௩) பிரிவாற்ருமை மேலிட்டுத் தலைவி தோழிக்கு உரைத்தது:- 'சிவன் மதனை முடித்துவிட்டானென்ற மாயத்தையும், அவன் மதியைத் தலையில் முடித்துக் கொண்டுவிட்டானென்ற மாயத்தையும் நம்பி, இனி யிவற்ருல் துன்பமில்லை யென்னும் உறுதிகொண்டு மாயவனைப் பிரியவிட்டேன்; இப்போது புஷ்ப பாணமும் நிலாவும் என்னை வீழ்த்தும்; ஆதலால், விள்தேன் மொழியாய்! (தோழீ) என்னைத் திருப்பேரையிற் கொண்டு போய்விடு.'

(கச) மதங்கி: கலம்பக வுறுப்பு பதினெட்டில் ஒன்று. இதற்கு மதங்கம், மதங்கு, மதங்கியா ரென்றும் பெயருண்டு. மதங்கி யென்பவள் ஆடல் பாடல்களில் வல்ல பதினாறு வயதுப் பெண். இவள் தொழில், இரண்டு கைகளிலும் வாளை யேந்தி வீசிக் கொண்டு தானுஞ் சுழன்று பாடி யாடுதல். இம் மாதின் ரூபலாவண்யாதிசயங்களைப் பார்த்து மோகித்த ஒருவன் அவளைப் பாராட்டிக் கூறுவதாகச் செய்யுள் செய்வது இதனிலக்கணம்.

விடையொடும் உழவர்பணைத்த(பெருத்த)இரும்பு ஏரைவிட்டு உழும் பணை(வயல்களையுடைய) திருப்பேரை விமலனை(ஸ்ரீ மகர நெடுங் குழைக்காதனை); மதங்கீ, விளி; துதிக்கும் உன் பாடல் வெள் அமிழ்து உதிக்கும்; அமிழ்து-அமிர்தம்; முன்பு ஆடல் நடையினை நோக்கில் அதற்கு இணை அரம்பை; இணை-ஒப்பு, அரம்பை—'ரம்பா' என்னும் தேவதாசி; நல் தொடைகளுக்கு

இணை அரம்பை (வாழை); நாசிக்கு உவமை எள் மலர்; நின் வாய், துவர்(பவளம்), அணி ஆம்பல்-அழகிய ஆம்பல்மலரையும் ஒக்கும். பல் நகுகதிர் முத்தணி(முத்துக்கோவை)யாம்; தட முலைத் திரளோ தமனியம்(பொன்) சிலம்பு(மலை)—தனம் மேரு மலைக்குவமையாம்; தாள்களில் ஒலிப்பது அச் சிலம்பு(நூபுரம்); கரத்தில் தரிப்பதும் உகம் (இரண்டு) வாள்; சார்ந்தும் (கூடியிருப்பதும்) பெரிய சமூகம்(கூட்டமான) ஆள்(மனிதர்); குழலில் காமனது உடைவாள்(தாழம்பூ); (நின்னைக் கண்டு) அழகினில் ரதி(இரதிதேவி) மனது உடைவாள்(கலங்குவாள்); உளத்தை மதிக்க (கடைய) வந்தனை; மதிக்க வந்தனையே ஆற்றுவம்-யாரும் மெச்ச நினக்கே வணக்கம் புரிவோம்.

(கரு) தந்து இடையில்-நூல் போன்ற இடையில், பரி தானை-தரிக்கும் ஆடை, இரதம்-ரஸம்-சுவை, தும்பி-வண்டு; ஆனனத்தில் (முகத்தில்) தனது(மன்மதனது) கொடி, அதாவது கண்ணாகிய மீனக்கொடி. மதன் விடுத்த தந்திரி (சேனாதிபதி) யென்பதற்கேற்ப பரி, தானை(காலாள்), இரதம்(தேர்), தும்பி (யானை) ஆகிய நால்வகைச் சேனை முதலியன கூறப்பட்டிருத்தல் காண்க.

(கசு) களி: கட்குடியர் கள்ளைச் சிறப்பித்துக் கூறுவதாகச் செய்யுள் செய்வது. பல கலங்கள்-பல கலம் கள், பல அணிகலங்கள்; திகழு மடல் சேர்-திகழும் மடல் சேர், திகழும் அடல் (வலிமை) சேர்; அப்பனையே-அப்பனையே, தலைவனையே; களியர்கள்-கட்குடியர்கள்; குடிகள்-குடிக்கும் கள், குடிஜனங்கள்; மாதவம்-கள், மா தவம்; மேதை-கள், பேரறிவு; மாரி-கள், மழை; தாலம் பொரு வடிகள்-பனையின் வடித்த கள், பூமி யளந்த திருமாலின் திருவடிகள் என இங்ஙனம் வெளிப்படையான பொருளும் உட்பொருளும் உய்த்துணர்ந்து கொள்க.

(கஎ) சோலைகளும் மஞ்சு(மேகம்) அங்கு உலவு, பண்ணைகளும் அம் சங்கு உலவு, வாவிகளும் அஞ்சம் (ஹம்ஸம்-அன்னம்) குலவு, செல்வரும் மஞ்சம் (அமளி) குலவு எனப் பிரித்து ஒவ்வொன்றோடும் இணைத்துக் கொள்க. வனசம்-தாமரை; பொற்பு திருக்கு உடையார்—அழகிய கண்களை யுடையவர்; போற்றார்

திருக்கு உடையார்—வணங்காதவராது வஞ்சகத்தாற் பொருந்திய அஞ்ஞானத்தை உடைக்காதவர்; வெற்பு திரு குடையார்-கோவர்த்தன கிரியைக் குடையாக உடையவர்.

(கஅ) வீட்டிற்றும் — கொன்றதும், பொலன்போல் தனு மானையே — பொன்போன்ற சரீரத்தை யுடைய மாய மானை (மாரீசனை)யேயாகும்; போற்றா அநுமானையே; பீடு-பெருமை, பூ வளை ஆழி-அழகிய சங்கு சக்கரம்; அம்பு எய்தது, பூ வளை ஆழியே-பூமியைச் சூழ்ந்த சமுத்திரத்தை; கோதையின் ஆரம்-ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலை; துயிலிடம் பெருகு ஓதையின் நாரம் (கடலின் ஜலம்); தீட்டு இரும் படை-கூரிய பெரியஆயுதம்; பேர் ஐ வை குந்தம் பேரழகும் கூர்மையுமுடைய கதாயுதம்; திருப்பேரைநகர், வைகுந்தம்-பரமபதம்.

(கக) குந்தளம்-கூந்தல்; குவலயத்துப் பாசம்-மண், பெண், பொன் ஆசைகள்; கொடிய பாசம்-யமபாசம்; அந்தகன் தமர்கள்-யம படர்கள்; ஐ-கபம்; வீடு-மோட்சம்; சடாரி-சடகோபனாகிய நம்மாழ்வார்; சேர்வ னென்ற பேரை — "தென்றிருப் பேரையிற் சேர்வன்னே" எனத் திருவாய்மொழி 7-ம் பத்து 3-ம் திருவாய்மொழியாகிய "வெள்ளைச் சுரிசங்"கில் சில இடங்களிற் பயின்றிருத்தல் காண்க. செய்யதான கன்னபாசர் - அழகிய கர்ணபாசர், மகர நெடுங் குழைக்காதர்.

(உ0) மகத்துவ மாயவர் பொன் பதமே எனக்கு அப்பனும், தமரும், தாயும், குருவு மாமென முடிக்க. பேயின் உரு கெட-பூதனை மாய;

(உக) இக் கொடி-பூங்கொடி போன்ற இப்பெண்; பதம்-பாதம், அறிஞர்போல படித்தலை நாடும்; படி தலை-பூமியின்மீது; கண், மதன் கணை போல மா வலிமை மன்னும்; மா வல் இமை மன்னும். வில்-ஒளி. இக் கொடியின் பதம் நிலத்தின்மீது பொருந்தும்; கண் இமைத்தலைச் சேரும்; ஆதலின் இவள் நிலமின் (பூலோகப் பெண்) என்க. தலைவியைக் கண்ட தலைவன், 'இவள் மாநாடப் பெண்ணோ? தெய்வப் பெண்ணோ? என ஐயுற்றுகை, அவளது பாதம் பூமியிற் றோய்தலையும் கண்ணிமைத்

தலையும் நோக்கி மாறுடப் பெண்ணோ எனத் தெளிந்தான். காட்சி, தெளிவு இரண்டும் இதனுள் அடங்கும். ஒருவர் கருத்து ஒருவர் அறியாத ஒருதலைக் காம மாதலின் இஃது கைக்கிளை.

(உஉ) வேதியரைவினுதல்: தலைவனோடு கூடிச் சுரநெறியே யாரும் அறியா வண்ணம் சென்ற தலைவியைத் தேடிச் செல்லும் செவிலி முதலியோர் தம்முன் எதிர்ப்பட்ட வேதிய ரிடம் தம் மகளைக் குறித்து வினவுதல். வேடன் கடி யார்ந்த கணைவிட: கடி-மணம், அச்சம்; வேடன்-வேள் தன் (மன்மத னுடைய), வேடுவன்; கலைநெகிழ-ஆடை குலைய, கலைமான் பிரிய; இளமான்-மான் போன்ற தலைவி; விள்ளுவிர் - சொல்லுங்கள்; சத்து உணர் வண் துறவு கொள் அந்தணர், சத்து உணர் வண்டு உறவு கொள் (ஸாரத்தை மாத்திரம் கிரகிக்கின்ற வண்டுகளின் தன்மையுற்ற).

(உங) அந்தராயம்-விக்கினம்; தடிந்து-தவிர்த்து; தந்தியா னை-கஜேந்திரனுக என்னை யெண்ணி; கா-காப்பாயாக. அம்பு யாசனன்-பிரமன்; பணி அந்தகாரி-சர்ப்பாபரணங்களை யுடைய காலகாலனுகிய சிவன்; அண்டு-பொருந்திய; 'தந்தியா'-என்பதில் விரைவில் விஷயத்தை அறிவிக்கும் நவீன சாதனமாகிய (Telegraph) 'தந்தி' என்றும் பொருள் படுதல் காண்க.

(உச) புருகூதன்-இந்திரன்; முசுகுந்த மன்னன் இந்திரனுக்காக அசுரரோடு போராடி வெற்றி புனைந்தவன். நின் பூவளந்த அருந்தாள் பூ எனக்கு நிதி(புதையல்) ஆகுமென்க.

(உரு) அம்மானை: மூன்று பெண்கள் கூடிப் பாட்டுடைத் தலைவனது பெருமையை ஆக்ஷேப சமாதான பூர்வமாக வார்த் தைபாடிக் கொண்டே அம்மானை யாடுவதாகக் கூறுவது. பெருங் கன்னன்-பெருங் கொடையாளி, பெருங்காதனுகிய மகர நெடுங் குழைக்காதன். படி அளக்க-பூமியை அளக்க, (எல்லோருக்கும்) உணவளிக்க.

(உசு) அம்மானை-மாமனுகிய கம்ஸனை; அம் ஆனை(பசுவை) மேய்த்தவனை; அம் மானை யெய்-அழகிய மாயமானை யெய்த, அம்மானை-அம் மகானை; விம்மு ஆனை-குவலயாபீடம்; காலன்

பால் ஆக-பமபுரம் சேர; மலை - போரிட்டழித்த. கண்ணனை அன்றி ஒருக்காலும் அன்பால் வேறு தொழேன் என்க.

(உஎ) வடமலை - திருவேங்கடம்; தென்மலை - திருமாலிருஞ் சோலைமலை; பாணன்-திருப்பாணாழ்வார்; கரிவரை-அத்திகிரி-காஞ்சீபுரம்; புள்வாகனன்-கருடவாகனனான திருமால்.

(உஅ) பிரிவாற்றாமையால் தலைவி மேகத்தைத் தலைவன்பால் தூது விடுத்தது: கனம் மாலை அலை வேலை-பெரிய வரிசை வரிசையான அலையையுடைய கடல்; கடல் அலையும் குரங்கும் தாவிக் குதிக்கும் மலைச் சிகரங்கள். மனம், ஆலை(கரும்பு ஆலை) உறு வேழம் (கரும்பு) என நோவ. மாலைமதி நேரும் முகத்தை யுடைய மாதர் இசை பாடுகின்ற திருப்பேரை. என மாலை-என் மயக்கங்களை. வனமாலை-துளப மாலை.

(உகூ) இதுவும் தலைவி மேகத்தை நோக்கிக் கூறுதல்: மேகத்தின் தன்மை: பயம்கொண்டு சத்திக்கின்றீர்—நீர் குடித்து முழங்குகின்றீர்; மலை வாய் நும் கண் நின்று பொழிகின்றீர்—மலையின் மேல் நும்மிடமிருந்து மழை சொரிகின்றீர்; பெரு மின்னல்இந்திரவில் மேவுகின்றீர்; பேராசை தனை அடைந்தீர்—பெரிய திக்குகளெல்லாம் பரவினீர்கள்:

தலைவியின் தன்மை:— பாலைக் குடித்து (தின்று) கக்குதல்; மலைவிளோடு (மலையையொத்த தனங்களின்மேல்)கண்ணீர் உகுத்தல்; இந்து (சந்திரனொளி வீசும்) இரவில் பெரும் இன்னல் மேவுதல்; பேராசை(அதிமோகம்)படைதல்: தலைவி தனக்குரிய தன்மைகளை மேகங்களும் அடைந்தனவாகக் கூறுகிறாள்.

(௩௰) இனமா-கூட்டமாக; வலைஞர், நீரிற் சஞ்சரிக்கும் மீன்களை நீராடு மாதரின் விழியென ஐயுறுகின்றனர். குருகு-நீர்ப் பறவை, நத்தி-விரும்பி; குருகு, மாதரது கண்ணின் நிழலை மீனென விரும்பிக் கொத்தி வெட்க முறுகின்றது. கூடு புனல் துறை-ஸமூக தீர்த்தம். மஞ்சு அ(ன்)ன-மேகத்தை யொத்த, உகம் மறை-உபய வேதம், வடமொழி, தென்மொழி வேதங்கள். இங்குக் கூறிய வரலாறு: ஒரு காலத்தில் அசுரர் வருணனது பாசத்தைக் கவர்ந்து சென்றனர். அதனைத் திரும்பப் பெற

விரும்பிய வருணன், பொருநைக் கரையை யடைந்து ஸ்ரீ மகர நெடுங் குழைக்காதரை நோக்கித் தவம் புரிந்து அப்பெருமா னருளால் திரும்பவும் பாசம் கிடைக்கப் பெற்றான். அந்நன்றிக் காக வருணன், தான் நின்று தவம் புரிந்த அத் தீர்த்தத்தில், 'எல்லாவுலகங்களினுமுள்ள சகல தீர்த்தங்களின் மகிமையும் கூடு வதாக' வென்றருள் செய்தமையால், இத்தலத்திலுள்ள அத் திரு மஞ்சனத் துறை – 'கூடுபுனற்றுறை' (ஸம்மூக தீர்த்தம்) எனப் பெயர் பெற்றது. இத்துறையில் பெருமாள் உகந்தணியத் தக்க அற்புத மகரகுண்டலம் அகப்பட்டமையால் இஃது மாகரிக (ஸம்மூக) தீர்த்தமெனவும் வழங்கலாயிற் றென்பர்.

(௩௧) ஆளும்-என்னை யாட்கொள்ளும்; அகமும், திருமுகமும், தாளும் முறையே (வனவாசம் சேர்)-துளசி வாசனை, அழகிய புன்சிரிப்பு(மந்தஹாஸம்), காட்டில் வசித்தல் பொருந்திய முகிலே யென்க. குழை கா தாலத்து நட்ட-குழையோடு கூடிய பாரிஜாத விருக்ஷத்தை பூமியிற் கொணர்ந்து நட்ட; முகிலே! கோவே! குழைக்காதா! எனை ஆட் கொண்டு கா எனக் கூட்டி முடிக்க.

(௩௨) கிள்ளை விடுதூது: தலைவனைப் பிரிந்து வருந்துந் தலைவி தலைவனிடத்துத் தன்னிலையைச் சொல்லும்படி கிளியைத் தூது செல்ல வேண்டுதல். சுகமதாகியே-சௌக்கியமாகவே, 'சுகம்' என்னும் பெயருடனேயே. வந்து உவந்து அணைந்திலன். சண்டன்–இயமன். வேளின் இரதம்–தென்றல், வாளி–புஷ்ப பாணம், முரசம்-கடல், சத்திரம்-குடையாகிய சந்திரன். அல்-இரவு. ஒல்லை-சீக்கிரம். புல்ல வரச் சொல்-தழுவ வரும்படி சொல்வாயாக.

(௩௩) அசுரர்க்கு இனியான்(இனியாதவன்); சுரர்க்கு இனி யான்(இனிமை யானவன்). துத்தி-புள்ளிகளையுடைய, அநந்தப் பணி-ஆதிசேடன், துலங்கும் அநந்தப் பணியான் - பிரகாசிக் கின்ற பல ஆபரணங்களை யுடையவன். கவியாம் அணி-வானரச் சேனை, மறுவே கவியா மணி–கௌஸ்துப மணி. தீம் கவி-மதுரமான பாடல் (திருவாய்மொழி). மதியார் வன் தீங்கு அவி யான். தொல்லைக் கலி(பழமையான கலியுகத்தை) முன் படைத் தான், ஆர்கலி (கடல்) முன்பு அடைத்தான். மலை ஆம் குடை

யான், கமலை(லக்ஷ்மீ) அங்கு உடையான். மஞ்சு வ(ண்)ணத்தான், நாகம் அஞ்ச உவணத்தான்—பாம்பு அஞ்சுகின்ற கருடப் புள்ளுடையவன். நண்ணார் பேரைப் பதியான்-பகைவர் பேரை மனத்திற் குறியாதவன்; நதி ஆர் பேரைப் பதியானே என்பதை எழுவாயாக்கிக் கொள்க. கடைநிலை தீபகம்.

(௩௪) பல வாயுச் சிதைவை அடக்கி-பஞ்சப் பிராணனையும் வெளியே விடாமல் அடக்கி. திதி சுதர் துக்கித்து இற-அசுரர் வருந்தி இறக்க. நத்தி-விரும்பி.

(௩௫) அடையார்-பகைவர். மறலி புரம்-யமலோகம். அரிகளை வெல் அரிகள்-பகைவரை வெல்ல வல்ல வானரங்கள். மகர உருப் பணி-மகரகுண்டலம் என்னும் காதணி. உடைத்தார்-தகர்த்தார். இப கரம்-யானைத் துதிக்கை, இஃது தொடைக்கு உவமை. துடைத்தார்-நீக்கியருளியவர்.

(௩௬) வேள் அம்பு பாய-மன்மத பாணம் பட; நெடுமாலாய்-மிக்க ஆசையுடையவளாகி-திருமால் போன்றவளாகி. வேதனையும் பெற்றாள் - வருத்தத்தையும் அடைந்தாள் - பிரமனையும் பெற்றாள். அரை சோமனை—அரையிலுடுத்திய வஸ்திரத்தை, அர்த்த சந்திரனை. கண்ணீர் ஆறுனள், கண் ஈராறு(பன்னிரண்டு) ஆனாள். மயக்கமது - மயக்கத்தை, மதுபம் (வண்டு) போல மயக்க மது மிகக்கொண்டாள். மது-கள், தேன். மரு வாய் இன் சுவை தந்து-வாசனை கமழும் இனிய வாயமுதம் தந்தருளி; மருவாய்-சேர்வாயாக.

(௩௭) முகுந்தர் மதம் - ஸ்ரீ வைஷ்ணவ மதம். இன்பம் அடைந்திட, பதம் தனை வணங்குமின் எனக் கூட்டி முடிக்க.

(௩௮) காம மிக்க கழிபடர் கிளவியில் தலைவி தலைவன்பால் நாரையைத் தூதனுப்புதல்: கடம்பா-கடம்பாக்குளம். முன் ௭-ம் பாடலில், 'வீரை பொருவும் தடம்' எனக் குறிப்பிட்டதூஉங் காண்க. திடம்-நிச்சயம். கடம்பாவில் நாராய்! பாவி மாரன் செயலால் எனக்கே உடம்பு ஆவி வேறும், இது திடம். ஈது ஓர்ந்து தென்பேரை நாராயணன் பால், அணவி(சேர்ந்து) நவி (வருத்துகின்ற) என் மால்(காதலை) நவில் என முடிக்க.

(௩௯) பாலனம்-பாயஸம், கண்டு-கற்கண்டு, கரும்பு அன்ன-கரும்பை யொத்த. அனங்கன் பாவையை அம்பால் பலவாம் தமர்(துளை) ஆக்கினன். சிசுபாலனது அம் கம்(தலை). பார் தமரைக் கண்டு பாலனம் செய்வாயேல் — உலகில் பக்தரை ஆராய்ந்து இரட்சிப்பாயானல், (வேள் தமராக்கி வைத்த) இவளையும் இரட்சிப்பாயாக. இஃது தோழி கூற்று. செவிலி கூற்றுமாம்.

(௪0) பைஅரவு அரி கொடியார் - பாம்புக்குப் பகையான கருடக் கொடியையுடையவர், பாழ் மதனர் இக்கு(கரும்பு வில்லை) ஒடியார். செய்யவள் ஆம் பொன் கொடியார் - திருமகளாகிய பொற்கொடியை யுடையவர். வலம்புரி-சங்கு. முன்பு கனிந்து கலை உரியார்-என்முன் வந்து மகிழ்ந்து ஆடையை உரிகிறு ரில்லை. நெஞ்சில் முப்புரியார்-திருமார்பில் பூணூலுடையவர். பேரைப் புரி-பேரை நகர்.

(௪க) ஆரியர்—வணங்கத் தக்கோர். ஆதிவருணத்தர்-பிராமணர். பூரியர்கள்-கீழ் மக்கள். பேரை மகரக் குழையரது தாளை எளிதிற் கருது பேரறிவு பெற்றவ ரெனில் யாரிழி குலத் துறினும் எமக்கு அவர்கள் ஆரியராவர். மாமலர் மறுத்தவர் ஆதி வருணத்த ரெனினும் பூரியராவர்.

(௪௨) சித்து: இஃது இரசவாதிகள் தம் பெருமையை ஒருவனிடத்துக் கூறும் இலக்கணத்தை யுடையது.

சித்தர் - ஒருவகைத் தேவ கணத்தார். நற்சித்தர்கள் - நல் மனமுடையவர்கள். சித்தரேம் யாம்—இரஸவாதிகள் நாங்கள்; செம்புதனை வெள்ளி தன்னை—செம்பையும் வெள்ளியையும், பொன்னாக மேற் காட்டுவோம்-செம்பொன்னாகச் செய்து காட்டுவோம். அழகிய புதனையும் சுக்கிரனையும் வியாழனையும்(நாகம்) ஆகாசத்தில் காட்டுவோம் என்றும் பொருள் கொள்க. கஞ்சக் குலத்தை(வெண்கலத்தை) ஓகோ! கனகமதாத் தெரிவிப்போம்; தாமரைக் கூட்டத்தையே கோகனகமதா (தாமரையாக) அறிவிப்போம். அயத்தையும் மாடு ஆக்குவோம்—இரும்பையும் பொன்னாகச் செய்வோம். அயம் - ஆடு, அயத்தையும் ஆடாக்குவோம். ஓதனம்-சோறு; ஓது அனம் என்றும் பிரிக்க.

தொந்தம்-தொடர்பு. விருப்ப மெலாமோ தனத்தே என்று பிரிக்கவும் இசையும் என்க.

(சங) தொந்தம்—சம்பந்தம். வளை—சங்கு. மதனால் நொந்த வளை—மன்மத வேதனைக் குட்பட்டு மெலிகின்ற தலைமகளை. கரம் ஆயிரத்தான்-சூரியன். மதி-சந்திரன். அம் தவளைக்கு அரவம் போன்றனன்—நீரில் வாழும் தவளைக்குப் பாம்பு போலும் பகைவனாயினான். மந்த அளைக்கு-கடையப் பட்ட தயிர்க்கு. அளை-வெண்ணெயுமாம். சந்திரன் சூரியன் போலக் காய்கின்றானென்க.

(சச) மருள்-மயக்கம். தெருள்-ஞானம். இனதனம்-மிக்க செல்வம். மண்டினும் - நெருங்கினும். இறை - கொஞ்சமும். வனசன்-பிரமன், அரன்-சிவன். வனமணி-கௌஸ்துப மணி, துளபமாலையணிந்த என்றுமாம். கஞ்சம்-தாமரை.

(சரு) அம் சுகம் மொழியார்-அழகிய கிளி போலுஞ் சொல்லுடைய மாதர்; தாசன்-ஊழியன். மஞ்சு-மேகம். ஆழிப் படை-சக்கராயுதம்.

(சகூ) பரந்தாமர்-மேலான இடமாகிய பரமபதத்தை யுடையவர். ஓர் தரம்-ஒரு தடவை. தாமம்-மாலை. சரம் - பூச்சரம். தார்-மாலை. ஓதி-கூந்தல். மடவார் என்றது இங்கு தோழிகளை. ஒண்காதன்-மகரநெடுங் குழைக்காதன். ஓதிமம்-அன்னம்.

(சஎ) ஓதம்-கடல், ஓதன்-கடலில் துயில்பவன். ஓது அனையாகும் யசோதை என்க. காதல் நை கோவியர்-மோகத்தால் வருந்தும் ஆயமகளிர். உந்தி நற்போதன்-பதுமநாபன். போதன்-பிரமனை யுடையவன் என்றுமாம். போரில் பார்த்தற்குப் போதனை (கீதோபதேசம்) புரிந்த நவநீதனை; நீதனை-நியாயமானவனை. நேர்-சமம்.

(சஅ) நேர் இல்-சமானமற்ற. சாபம்-வில். திரை-நரை திரை. நிணம்-தசை. ஒவி-ஒழிந்து. கிழப் பருவத்தைச் சித்திரித்தல் காண்க. எகினம்-அன்னம். அயிராணி கொண்கன்-இந்திரன். பாரி-மனைவிமார்.

(சகூ) பணி பணியாக் கொளும் பரன்-பாம்பை ஆபரணமாகக் கொண்ட சிவன். அணி அணியா—கூட்டங் கூட்டமாக. மணி மணி வண்ணனர்—அழகிய நீல ரத்தினம் போன்ற நிறத்தை யுடையவர். எ(ண்)ணில்-தியானித்தால். எண் இல் இன்பம்-அளவற்ற சுகம்.

(ருഠ) தையலர்-தோழியர். சகி-பொறு (தோழிக்கும் பெயர்). கொக்கு-மாமரம். 'வெயிலில் வாடாதபடி (யான்) நீர் வார்த்த நன்றியை மறந்து இம் மாமரம், என்னை வருத்தும்படி கூவுகின்ற குயிலுக்கு ஏன் இடம் கொடுத்தது?' என்ருள் தலைவி.

(ருக) கொக்கின் வாயை-கொக்கு வடிவாக வந்த பகாசுரனது வாயை. கோப மடமாதர்-கோபிகாஸ்திரீகள். குணஞ் சேர் இம் மாது-தலைவி. இக்கன்—(இக்கு-கரும்பு) கரும்பு வில்லையேந்திய மன்மதன். இக்கன் அரி வில்—மன்மதனுக்குப் பகைவனை சிவனது வில், சிவதனுசு. பெருங்காற்று-சூருவளியாக வந்த திருணவர்த்த னென்னும் அசுரன். எருது ஏழு தழுவ வந்தது பின்னைப் பிராட்டிக்காக. தளிர் மெய் மான்—தளிர் போலும் மிருதுவான சரீரத்தையுடைய மான் போன்ற தலைவி. தாரைக் கிறைவன்-வாலி (தாரையின் கணவன்); தாரை - நக்ஷத்திரம். தாரைக்கிறைவன்-சந்திரனுக்கும் பொருந்தும். நூற்றெண்மர்-சோழ நாட்டினின்று சுந்தரபாண்டியனல் தென்றிருப்பேரையிற் குடியேறிய அந்தணர் நூற்றெண்மர். மழை-கருமேகம். மான அநீதன்; மானவ நீதன்-மானிட நீதியுடையவன், மால்-பெருமை வாய்ந்த, நவநீதன்தான்—திருட்டுத்தனமாக வெண்ணெயுண்டவன் தானே!

(ருஉ) தருகுஞ் செவி உடையார்-தக்க அழகு வாய்ந்த ஆடையை (பீதாம்பரத்தை) உடையவர். மிகுஞ் செவியுடையார்-நெடுங் குழைக்காதர். அரவு அணையார் உகந்து சுகம் தர அணையார் எனக் கூட்டி முடிக்க.

(ருங) அணை ஆரணங்குக்கு—அணைகின்ற சீதாபிராட்டிக்கு. அணை மகிமை-சேதுவின் மேன்மை. இணைத்தாள்-இருபாதம். புணை-தெப்பம். நவமான கோள்-நவக்கிரகம். நவ நவமா-புதிது புதிதாக; பவம்-பிறவி. ஆழ்பவர்க்குத் தாள் புணையாம் என்க.

(௫௪) சம்பிரதமாவது: சால வித்தை முதலியன செய்வார் தம்மைத் தாமே புகழ்ந்து கூறியதாகச் செய்யுள் செய்யும் இலக்கண முடையது. ககனம் உலவும் அம்புலி தனைக் கூடவே சுடச் செய்குவன்—ஆகாயத்திற் சஞ்சரிக்கும் சந்திரனைக் கூட உஷ்ண முறும்படி செய்வேன், காட்டில் திரியும் அழகிய புலியைக் கூட (துப்பாக்கியால்) சுடும்படி செய்வேன். கொடு வெயிலை நிலவாய் வரப் புரிவன்—கொடிய வெய்யிலை சந்திரிகையாகச் செய்வேன், வெயிலை பூமியில் அமையும்படி செய்வேன். கோட்டை விரலால் அழிப்பன்-மதில்களை விரலால் தவிடு பொடியாக்குவேன், (தரையிற் கீறிய) வரையை விரலால் அழிப்பேன். பருமணி கொள் ஆழி-ரத்நாகரமாகிய கடல், கற்பதித்த கணையாழி; பாணி-கை. பலகையிலை—அநேகங் கயிலாச மலைகள், பலகையும் இலையும். பூ சிரம் தாங்குவன்-பூமியைத் தலையிற் சுமப்பேன், புஷ்பத்தைத் தலையில் சூடிக்கொள்வேன். பயோதரம்-மேகம், கொங்கை. பெருவரைகள்-குல பர்வதங்கள், நீண்ட ரேகைகள். அங்கி-நெருப்பு, சட்டை. லோகம் - உலகம், பஞ்சலோகம் (பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம்). பேழை-பெட்டி. அணி-அழகு. நெடிய கன்னனார்—மகரநெடுங் குழைக்காதர். ஆள் அலாக் கடவுள் தனையும், மொழிவன் - சொல்வேன்; ஒழிவன்-ஒழியும்படி செய்வேன். வெளிப்படையான பொருளும் உட்பொருளும் இங்ஙனம் உய்த்துணர்க.

(௫௫) அளியுடன்-தயவுடன். துழாய்த்தார் எனக்கு அளிக்கின் பொன்றேன்; அளியெனும் பேரும் உனக்கே தகும். பொன்றேன்-மரணமடையேன்.

(௫௬) பூமனை திரு-தாமரையை வீடாகக் கொண்ட திருமகள். பூமனை-பிரமதேவனை. துழாய்த் தாமன்-துளப மாலையையுடையவன். பரந்தாமன் — பரமபதத்தை (உயர்தரமான இடத்தை) யுடையவன். கா-இங்கு, பாரிஜாதம். மனை-சத்தியபாமையின் வீடு. ஓராயிரம் நாமன்-சகஸ்ரநாமனாகிய திருமால். நாம் உலகில் சீர் அனைத்தும் பெறுவம் என்க.

(௫௭) ஊசல் - ஊஞ்சல், டோலோற்சவம். உள்பலகை-மனமாகிய பலகை. பாசம் எனும் பாசம்-அன்பாகிய கயிறு. பங்கயத்தாள்-திருமகள். திருப்பேரைவல்லி-பூமிப் பிராட்டி.

(ருஅ) மன்மத பாணம் துளைத்த துவாரத்தின் வழியே தென்றல் உட்புகுந்து உயிராகிய காற்றை சர்ப்பத்தைப்போன்று உண்கின்றது. தெசை-தன்மை. அங்கருடனோடு-அங்கு அருள் தன்னோடு. அலங்கல்- மாலை. சர்ப்பம் என்றமையால் கருட னோடு எனக் கூறிய சமத்கார முணர்க.

(ருகூ) உலோபர்-உலுத்தர். போச மன்-போஜராஜன். அங்க பூபதி-கர்ணன். பாசம் அடைந்தோன்-வருணன்.

(சுய) குறம்: இது கட்டுவிச்சி கூறல் என்னும் துறை. குறத்தி தலைவிக்கு அவள் காமுற்ற தலைவன் வாய்ப்பைக் குறி தேர்ந்து கூறுவதாகப் பாடும் இலக்கண முடையது.

மருவலர்கள்-பகைவர்கள். ரெகுபதி-இராமன். குறமின்-குறத்தி. முறம்-சுளகு. அருணன் இளையவன்-கருடன். பலி-பல்லி. பல்லி வலப் பக்கம் அதிர்தல் நலம். அருணம்-சிவப்பு. கர வரை-கை ரேகை.

(சுக) ஏர்-கலப்பை, அழகு. இக்குச் சிலையன் - மன்மதன். மா உரம்-மிகுந்த எரு, திருமகள் மார்பில். வித்தை-விதையை, கல்வி. கமலம்-நீர், தாமரை. சங்கம்-சங்கு, கழகம். கதிர்-நெற்கதிர், கிரணம். கண்டு அங்கு அறுத்தல், கண்டம் கறுத்தல். பல கல்-அடையாளக் கற்கள், நவரத்தின வகை.

சசி-சந்திரன், இந்திராணி. சாயை-நிழல், சூரியன் தேவி. இனக் கிளை-கூட்டமான மரக் கொம்பு, ஜோடிஜோடியான கிளிகள். தும்பி-வண்டு, யானை. பூ மேல் பிறங்கல்-மேலே பூக்கள் பிரகாசித்தல், பூவில் உறைதல். மணமது - நறிய தேன், கலியாணம். அரம்பை-வாழை, ஓர் தேவதாசி. கருமஞ்சு ஆர்தல், கருமம் சார்தல்.

அங்கு அலை தோய்தல், அம் கலை(ஆடை) தோய்தல், அம் கலை(வித்தைகள்) தோய்தல். வாணி-கலைமகள். அப்பு நிதம், அ புநிதம். அம் குவளை, அங்கு வளை. சரம்-ஜலம், பாணம். ஓதிமம்-அன்னம், ஓது இமம்(பனி). பல வாவிக்கு பயம் தர-பல குளங்களுக்கு நீர் கொடுக்க, பல (ஆவி) உயிருக்கு அச்சம் கொடுக்க. புளினம்-மணல் மேடு, பறவை யினம். பல் மதகும்

சரம்(ஜலம்), பல் மத குஞ்சரம்(யானை). நால்வகை யோனி-அண்டசம், சுவேதசம், உற்பிசம், சராயுசம். எழுவகைத் தோற்றம்-தேவர், மக்கள், நரகர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன.

(சுஉ) பாசமுற-அன்பு பொருந்த. நமன் பாசம்-யமபாசம். சீர் அடைதல் இம்மையில் என்க. விண்ணூர்-பரமபதம்.

(சுங) **இஃது கழிக்கரைப் புலம்பல்:** கழிக்கரையிற் காணப்படும் பொருள்களை முன்னிலைப் படுத்தித் தலைவி தலைவனது பிரிவாற்றுமையால் புலம்புதல். கழிக்கரை-கடலை யடுத்த களர் நிலம். புன்னுகமே-புன்னைமரமே, என் புன் ஆகம் சோரும். செறிய ஒன்றும் மேகம்-நெருங்கிப் பொருந்திய மேகமே, சிறியள் என்றும் ஏகமே. ஏகம்-தனிமை. ஏர் அனங்கன் அம்பு உ(ள்)ளே சார நொந்தேன். கம்புளே — சம்பங்கோழியே. பேரை அண்டும் ஆயனர். பருமை அம் புயங்களும். இருகண் அம் புயங்களும். அதர விம்பம்-இதழாகிய கோவைப் பழம். வதன விம்பம்-முகமாகிய (சந்திர) விம்பம். ஆயனரது புயங்களும், அம்புயங்களும், அதர விம்பமும், வதன விம்பமும் என் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுமென்க.

(சுச) கொடிகளும் அம்பரம்(துகில், ஆகாயம்) நாடும், முனிவரும் அம் பரம்(பரம்பொருளை) நாடும். கண்டு அரும் பாடல்-கற்கண்டினை யொத்த திருவாய்மொழி. கடல் என்றமைக்கு ஏற்பக்(காது அலை)காதலை என்ற நய முணர்க.

(சுரு) மாடு-பக்கம். நல் முத்து உறையும் கூடுபுனல்துறை. மலர்த் தடம்-பூவோடு கூடிய தடாகம். மதிற் றடம்-மதிலின் விசாலம். இலங்கு உழையார்—பிரகாசிக்கின்ற மானைக் கையிலேந்திய சிவனுர். மாதரசே! இ(ன்)னம் ஓர் காத முறில் நெடுங் குழையாரது வண்ணமும் எண்ணமும் தெரிவாய் எனக் கூட்டி முடிக்க.

(சுசு) எண்கணன்-எட்டுக் கண்ணுடைய நான்முகன். எரிக் கணன்-தீக் கண்ணுடைய சிவன். பல எண் கணன்—ஆயிரங் கண்ணனை இந்திரன்.

(சுஎ) காதிசுதன்-விசுவாமித்திரன். சிலை-கல். மாது வடிவு-அகலிகையின் ரூபம். விதுரன் குடிலிற் போல மலர்ப்பதம் என் நெஞ்சுறவே அருள்வாய் என்க.

(௬அ) மறம்:– தம் மகளை மணம் பேசி அரசனால் அனுப்பப்பட்ட திருமுகத்தைக் கொண்டுவந்த தூதனிடம், மறவர் மணம் மறுத்து அரசனை அவமதித்துத் தம் வீறு தோன்றப் பேசியதாகச் செய்யுள் செய்வது.

குடிகளில் – குடிகளிடத்தில், குடிக்கின்ற கள்ளில். நிலமாண்ட-நிலத்தை ஆண்ட, நிலத்தில் மாண்ட. பட்ட முடி அரசனுக்கு-பட்டத்தில் திருமுடி கவித்த அரசனுக்கு, பட்டுப் போன நிருபனுக்கு. மாதினை-(எங்கள்) பெண்ணை, சிறந்த தினையை. நுகர்ந்திடுமோ-அநுபவிக்குமோ, தின்னுமோ. பாரதிபதி-சக்கரவர்த்தி, கலைமகள் கணவன். சக்கிரி-அரசன், திருமால். மான்மதக் குறி-கஸ்தூரி திலகம், வைணவ சமயக் குறியாகிய திருமண் காப்பு. பாரதிபதியின் (பிரமனது) திருமுக மெனில் நான்கு முகங்களும் எட்டுக் கண்களும் இல்லை; சக்கிரியின்(திருமாலின்) திருமுகம் எனில் மான்மதக் குறியைக் காணேம் எனக் கூறிய நயம் காண்க.

(௬௯) முதல் இரண்டடிகளில் அநுமானுக்கும் சிவனுக்கும் சிலேடை. தூது நடந்தது-(சிவன்)பரவைபால் தூது சென்றது, (அநுமான்) இலங்கைக்குத் தூது சென்றது. புரம்-திரிபுரம், இலங்கை. இராமன்-(இரா + மன்) சந்திரன், ஸ்ரீராமன். தீது செய் தக்கன்(தக்ஷன்), தீதுசெய்து அக்கன்(அக்ஷன்,இராவணன் மகன்). சிவன் தானெனத் தோன்றா அநுமான்-அரனே அநுமானாக வந்தானென்க. அணை வாய்-பஞ்சணை மீது. அணைவாய்–சேர்வாய்.

(எ0) மாதவன்-திருமகள்கொழுநன். அமுது ஈந்தருள் மாது (மோகினி) அவன். வனத்தே திரி மா தவன்(தவவேடத்தான்). தமம்-இருள். நீக்கவும் ஆதவன். அன்னவன் தானையே துணிவு வானரம். இட்டது முன் தானையே(புடைவை). அழைத்தது அன்று ஆனையே(கஜேந்திரனே). மேய்த்தது ஆனையே(பசுவை). அடவி-விருந்தா வனம்.

(எக) ஆனிரை-பசுமந்தை. திருநாமந்தான் மருந்து. மானவர்-மானிடர்.

(எஉ) என் காதல் அவன்தனை துருவும் (தேடும்). அந்த மணிக்காதன் மருவிலன்(சேர்கிலன்). மதன் பகழிப் போதே (புஷ்ப பாணமே) இருமயல் தந்து இப்போதே உயிர் பருகும்.

குறிப்பு:— மூலத்தில், 'இருமயல் தந்தினி யிப்போதே' என்றிருப்பதை 'இருமயல் தந்துயி ரிப்போதே' எனத் திருத்திக் கொள்க.

(எஙு) தாது - மகரந்தம். கா (பொழில்) வான் காதி (மோதி) விளங்கும்.

(எச) தலைவன் ஒருமாதைக் கண்டு வியந்துரைத்தல்: கஞ்சம், செவ்வாம்பல், சங்கு, கருங்குவளை, வரால், கோகம்(சக்கரவாகப் பறவை), வள்ளை, சைவலம்(பாசி) இவை தடாகத்திற் பொருந்தியவை. இவை தலைவியின் அவயவங்களில் முறையே முகம், வாய், கழுத்து, கண், முழந்தாள், ஸ்தனம், காது, கூந்தல் ஆகிய இவைகட்கு உவமையாகும்.

(எரு) கந்தரம்-மேகம், கழுத்து. மந்தரம்-மந்தரமலை. மருங்கும் அந்தரம். கழை-மூங்கில். அம் புயம்-அழகிய தோள். அம்பகம்-கண். ககனம்-காடு. குரம்பகம்-குளம்பு. சொல் தீம் கனல்(கன்னல்-கரும்பு). மோகத் தீங்கு அனல். இம்பரோடும் புலவரே-இவ்வுலகத்தாருடன் வானுலகத்தவர். தொழ நெருங்கும் ஆயனை. இன்னம் ஆயுமே-இனியும் ஆராய்வீர்.

(எசா) இன்னல்-துன்பம். ஐங்கணை மன்னவன் - மன்மதன். சந்து-தூது. பொன்னவள்-திருமகள்.

(எஎ) பணிக் கேது நிருபன்-துரியோதனன். பாகாய்-சாரதியாய். வலம்-வெற்றி. மலயம் பெறச் சாரும் நதி-தாம்பிரவருணி. தேறல்-தேன். வெல இன் கனிச்சாறு—வெல்லம் போன்ற பழச்சாறு. பழனம்-வயல்.

(எஅ) பிச்சியார் என்பது சிவசின்னம் அணிந்து பிச்சைக்குத் தெருவிலே வருகிற மகளிரை நோக்கித் தன் வேட்கையை வெளிப்படுத்தி ஓர் காமுகன் கூறும் இலக்கணமுடையது.

தானம்-மதஜலம். புகர்மா-யானை. மங்குல்-மேகம். மீனவிழா-பங்குனி உற்சவம். செம்பணி-செவ்விய பாம்பு, செம்பிறை

செய்த ஆபரணம். அங்கம் குளத்திருக்கை-அடையாளமான நெற்றிக் கண்ணை; அங்கு அங்கு உளத்திருக்கை—ஆங்காங்கு மனத்திற் கொண்ட வஞ்சகத்தை. ஆசைப்புரம்-திக்கிலுள்ள முப்புரம், ஆசை கொண்ட சரீரம். தனம்-ஸ்தனம், திரவியம். எனை நீர் உமையாள் எனக் கருதும்; நீரும் எனை ஐ(அழகிய) ஆளெனக் கருதும். என் ஆலிங்கனம் நீர் பெறலாம்; என்றால் இங்கு அனம்(அன்னம்-சோறு) நீர் பெறலாம். ஐயம்-சந்தேகம், பிச்சை.

(எகூ) கொற்றியார் என்பது வைணவ சின்னம் அணிந்து பிச்சைக்குத் தெருவிலே வருகிற மகளிரை நோக்கித் தன் வேட்கையை வெளிப்படுத்தி ஓர் காமுகன் கூறும் இலக்கண முடையது.

கந்தம் - வாசனை. வனமாலை (அழகிய விஷ்ணுவை) உளம் தனிலும், வனமாலை (துளசிமாலையை) களம் தனிலும் (கழுத்திலும்). வாசம்-வசித்தல். சமயம்-மதம், வேளை. காசினி-பூமி. கூடல்-சேர்க்கை, திருமாலிருஞ் சோலைமலை. அழகரை-(அழகு + அரை), (கூடல்) அழகரை.

(அ௰) சந்திரோபாலம்பனம்: சந்திரனைப் பழித்தல். தலைவி கூற்று உடையின்பதி—உஷையின் கணவனை அநிருத்தன். உஷை—பாணாசுரன் மகள். பற்குனன் - அருச்சுனன். சோதி வலி பெற்றவனும் வெய்யவன் தன் பல கரங்கள் தொலையச் செய்த—பிரகாசமுற்ற மகாபலி பெற்ற வெய்யவனை பாணாசுரனது ஆயிரங் கைகளும் வெட்டி வீழ்த்திய, பிரகாசமாகிய வலிமையையுடைய சூரியனது கிரணங்களை (சயத்திரதனைக் கொல்வதற்காக) மறையச் செய்த. சூதம்-சூதாடுகருவி. இது தனத்துக்கு உவமை. காதுறல்-கேட்டல். கரம்-கை, கிரணம். "சந்திரனே! பேரைக் காவலன் வெய்யவன் கரங்களை தொலையச் செய்தவன்; உன் நீள்கரந்தனால் சூதம் என் கொங்கையை நீதியில்லாமல் தொட்ட செய்தியை காதுறுமுன் கரந்து செல்வை" எனத் தலைவி கூறினாள். உடையின்பதியும் பற்குனனும் வாழ்வுற, சோதிவலி...............தொலையச் செய்த: சிலேடை.

(அக) கார் மின்னல் விடும் காலம்; மனைவியரைச் சேர்ந்த வரும் இன்னல் விடும் (ஒழிக்கும்) காலம். சம்பு-நாவல் மரம்.

பழம் உதிரும் காலம்; மதன் துயரம்-மன்மத வேதனை. விரகியர் முன்பு அழ முதிருங்காலம். மருத இனம்(மருத மரங்கள்) பூத்து அவிருங் காலம். நீத்தமதால்-வெள்ளத்தால். பூ தவிரும் காலம். கேகயம்(மயில்) திகழும் காலம்; பிரிந்தே கயந்து (கசப்புற்று) இகழும் காலம்.

(அஉ) வலைச்சியா ரென்பது: மீன் விற்கும் வலைஞர் மகளைக் கண்டு காமுற்று ஒருவன் அவளை நோக்கித் தன் வேட்கையை வெளிப் படுத்திக் கூறியதாக வரும் இலக்கணமுடையது. மாலை-மாலைப் பொழுதில், ஆசையை. உங்கள் வாளையும்-உம்மிடத்தி லுள்ள வாளைமீனையும்; உம் கண் வாளையும். சேல்-மீனில் ஒரு வகை. தூக்கிக் காட்டல்-நிறைபோடல்; உயர்த்திக் காட்டுதல். சேர்ந்திடும் பலம்-நிறையிட்ட பலம்(நிறை விபரம்); சேர்ந்திடும்-கூடுவீர்; பலம்-பிரயோசனம். முதலை யீவேன்-பொருள் தருவேன், மீனுக்குப் பதில் முதலையைக் கொடுப்பேன். விலையில் முத்தம்-விலையில்லாத ஒருவகை முத்தினம், முத்தமிடுதல்.

(அரு) தலைவியைக் கண்ணுற்ற தலைவன் ஐயுற்றுத் தெளிதல்: (இவள் பிறந்த இடம்) பாற்கடலோ? அமராவதியோ? விண்ணகர் - அமராவதி. விடைமலை - இடபகிரி - திருமாலிருஞ் சோலைமலை. கனபோகிகள்-பல பாம்புகள், பல சுகபோகிகள். அநந்தபுரம்-நாகலோகம். ஊர்-சஞ்சரிக்கின்ற. இதில் திருப்பாற்கடல், திருவிண்ணகர், திருவிடைமலை, திருவநந்தபுரம், தென்திருப்பேரை ஆகிய சில திவ்ய தேசப் பெயர்கள் தோன்றுதல் காண்க.

(அச) படி-பூமி. கஞ்சமின்-திருமகள். குழைக் கன்னம்-குழைபணிசெவி; எழிற் கன்னம்-அழகிய கபோலம். சரோசம்-தாமரை. முகசரோசமும்......சிகை - முகமாகிய தாமரையை நகரும் அளி போன்ற பூர்வசிகை. இது "சூடா சும்பி முகாம் புஜம்" எனப் பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் அருளியதை நினைப்பூட்டியவாறு. மேலும் இவ்வாசிரியர் மணவாளமாமுனி ஊசல் திருநாமத்தில், "ஆனனபங் கேருகத்தை நகருஞ் சோதி அளி போல இலகு நறுங் குஞ்சி" என்று கூறுவர். உள்ளமே! ........நீ விடேல் என முடிக்க.

(அரு) அளி - வண்டு; பார்ப்பு - குஞ்சு; நூல் பார்ப்போர் - நூலாராய்வோர்.

(அசு) இடைச்சியார்: தெருவில் தயிர்விற்கும் இடைச்சியைக் கண்டு வேட்கையுற்ற காமுகன் தன் விருப்பத்தைப் புலப்படுத்துவதாகக்கூறுவது. பலவிடையர்-ஏகாதச ருத்திரர். பணி-வணங்குகின்ற. கனகக் கலை-பீதாம்பரம். மகளிர் மணி-ஸ்திரீ ரத்நம். அருந்ததி என்றே பகரக்கேட்டு-அருமையான 'தயிரோ ஓ தயிர்' என்று விற்கக் கேட்டு, வசிட்டன் மனைவியான அருந்ததி போன்ற கற்பரசி என்று பலரும் சொல்லக் கேட்டு. ஆடைபடி-ஆடை படிந்த; குசக்கலசத் ததியாசை-மட் கலசத்திற் பொருந்திய தயிரில் விருப்பம். மேலாடை தவழும் முலையாகிய கலசத்தி னிடத்து மிகுந்த காதல். கலம்-பாத்திரம், அணிகலம். அவை அளித்து - அத் தயிரைக் கொடுத்து, அந்த ஸ்தனங்களை அளித்து. என் அகம் உற, என் நகம் உற. கன அதிட்டன்(யோகசாலி), கன வதிட்டன் (வசிஷ்டன்).

(அஎ) மதிக்கும் பயப் படவே-மதிக்கின்ற ஜலத்திற் சஞ்சரிக்கும் படகே. மதிக்கும் பயப்படவே-சந்திரனுக்கும் அஞ்சும் படியாகவே. சிறை(சிறகு) பால்(பால் போன்ற) அ(ன்)னமே! அருந் தேனே(வண்டே), திசைப்பால் அ(ன்)னமே அருந்தேனே (உண்ணேன்). வேள் போது ஏ அஞ்சு-மன்மதனது புஷ்ப பாணம் ஐந்து. மாய்வு இப்போதே அம் சுறவே(சுறு மீனே). மணல் ஆற்று அலை உந்து இன மணியே. தினமணி-சூரியன். இன மணிகள் தினமணி போன் றெரிகின்றன வென்க. வாலுகம்-மணல். வாலுகம் மா மரைக்கணம்-மணலில் திரியும் அழகிய மான் கூட்டம். பிரிவால் உகமாம் அரைக் கணம். திடர்-மணல் மேடு. பிறர்-தலைவர். இன்ப வளம் பொருந்து இடரே. அரவம்-ஒலி. மேனி-வடிவு. திரை-அலை. அடையேன் படி(பூமி)மேல் நித்திரையே. செ(வ்)வி (அழகு)சார் அ பனையே(மரமே). அணி மா செவி-நெடுங் குழைக் காது. அப்பனையே (வரும்படி)அழை என முடிக்க.

(அஅ) சுரம்-பாலைவனம். சாரசம்-தாமரை. எகினத்தின் தூவி-அன்னத்தின் சிகையிலுள்ள இறகு. அனிச்சத்து ஆரும் மலர்-அனிச்சமலர். "அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்-அடிக்கு நெரிஞ்சிப் பழம்" என்ற திருக்குறட் கருத்து. வடு-புண். வடவை - வடவாமுகாக்கினி (பெண் குதிரை வடிவான நெருப்பு. பேட்வா-பெண்குதிரை). பெரும் பயம்-அதி பீதி. மலைவாயுமேவும்-மலையுடனே பொருந்தும். தலைவி, சுரம் கடந்து பேரையில் எங்ஙனம் செல்லுமென்று நற்றாய் கூறியவாறென்க.

(அகூ) பாண் - தலைவியைப் பிரிந்து பரத்தையிடம் சார்ந்த தலைவன், தலைவியின் ஊடல் தணிக்குமாறு பாணனை அனுப்பத் தலைமகள் பாணனை வெகுளுதல். சுரம்-சப்தஸ்வரம். சுருதியின் கானம்-சாமகானம். கைக்கும்-வெறுக்கும். நின் பாடல் யார்க்கும் கைக்கும். என் நாதர் வரவு இ(ல்)லை, மான் ஆர் தன(தன்னுடைய) வரை(கிரீடா பர்வதம்) அடைந்தார்; என் நாதர் வரவிலை மானார் தனவரை அடைந்தார் (சிறந்த விலைமாதரது கொங்கையாகிய மலையைச் சேர்ந்தார்). வருமுன் சொல் கணிகையார் பால் செல். வரும் உன் சொல் கணி(உன்னிப்பார்), கையார்(வெறுக்காதவர்) பால் செல். தையல் இராகம்-ஸ்திரீயின் ஆசை, தையல்தொழிலும் பாடல் தொழிலும். பாணர் இருவகையர்-தையற் பாணர், பாடு பாணர். இவருள்ளும் பாடு பாணர் இழிந்தோர் என்ப. ஆங்கு ஓது-(உன்பாடலை) ரஸிப்பவரிடம் பாடு.

(கூ0) மிடி-வறுமை. சுதர்-குபேர புத்திரர். வங்கமாயகிரி-வெள்ளிமலை, கைலாயம். உமாதவன்-சிவன். புத்திரரது சாப மொழித்தமையால் குபேரனும், பலிதொலைத்தமையால் சிவனும், அமுதம் ஈந்ததால் அண்டரும் நிதம் சரண் பணிய அணுகுகின்றனர்.

(கூக) திரு வின் மணி சிகரம்-அழகும் ஒளியும் பொருந்திய மணிகளையுடைய கொடுமுடிகள். விண் கேசரி-வானத்திலுள்ள சிங்கராசி. பிடிக்கரி-பெண்யானை. அரம்பை-வாழை. இறால்-தேன் கூடு. கற்கடகம்—கடக ராசி. ஐந்தரு-தேவதாருக்கள். கோடு-கொம்பு-கிளை. கலயமுனி-கும்பமுனி-அகஸ்தியர். நிலயம்-இருப்பிடம்(மலயபர்வதம்). விதமாமலர்-நானாவித புஷ்பங்கள், சிதறுபு-சிதறி. சாஅல-மிகுதியாக. காஅல்-காற்று. வேய்-மூங்கில். விண்மீன்-நட்சத்திரம். வழுதிநாடு-பாண்டி நாடு. திருக்குருகூர்க்கு ஒவ்வோர் காதம் நாற்புறமுமுள்ள பிரதேசம் "திருவழுதி வளநாடு" என்பர். பொன்நாடு-சுவர்க்கம். மணமின்-மணமகள். அணையில்-பஞ்சணையில், பொருநை நதியிற் கட்டப் பெற்றுள்ள எட்டு அணைகளில். துறை-கூடுபுனல்துறை. நவம்-புதிது. பவம்-ஸம்ஸாரம்.

(கூஉ) அருணன்-சூரியன்; தனுவில்-தனுராசியில்-மார்கழியில்; இமம்-பனி. அருண விதழ்-சிவந்த அதரம். இரணமாக்க-புண்ணுக்க. இக்காலம் இங்கு எனக்கு ஆலம்(விடம்) போன்றது. ஆதலின் குழைக்காதா! சேர். இஃது தலைவி கூற்று.

(௯௩) மா விலை-மிக்க விலை, மாந்தளிர். அங்கம் கோலம், அங்கு அங்கு ஓலம்(சப்தம்). அன்னார்-அவ்வேசையர். சந்தன நல் நகம் படிந்து-சந்தனமும் நகக்குறியும் பொருந்தி; சந்தனம் நன் அகம் படிந்து - சந்தன விருக்ஷத்தைத் தோய்ந்து. பூ வாசனை-பிரமனை, மலரின் வாசனையை. மாரன்தேர்-தென்றல். யவ்வனம் - யௌவனம்—"வஸந்த யௌவநா வ்ருக்ஷா:"; அவனம்-துளசி. நன்றே-நன்றோ-நன்றன்று.

(௯௪) பூவை - நாகணவாய்ப் பறவை. பிரியன் - பிரியமுள்ளவன், பிரியேன். அணைந்து-கலந்து. ஒண் குழையுறும் அரி-மகரநெடுங் குழைக்காதன். தெரி, அ(ல்)லில் (இரவில்). தெரியல்-பூமாலை. வர உரை-வரும்படி சொல்வாய்.

(௯௫) வெறிவிலக்கு: இறைவனாகிய தலைவன் மீது வைத்த காதல்மிகுதியால் நோயுற்ற தலைவியைப் பெற்றோரும் உற்றோரும் சூழ்ந்து நின்று, இஃது ஒரு நோய் என்று வேலனை யழைத்து ஆட வைத்து அவன் சொற்படி ஈன தேவதைகளுக்குச் சில உயிரைப் பலியிட எத்தனிக்க, தோழி தலைவியின் உண்மை நிலையை உரைத்து அவ் வெறியாட்டலைத் தடுத்தல். நம்மாழ்வார் "தீர்ப்பாரை யாமினி" என்னும் நாலாம்பத்து ஆறும் பதிகமான திருவாய்மொழியால் இத்துறை விசதமாம்.

ஓடு கால் இரதன்—வீசுகின்ற தென்றல் தேரை யுடைய மன்மதன். கணைப் பூ-மன்மத பாணமாகிய புஷ்பம். மருத்துவர் பற்பலர்-பதினொரு இந்திரர்; அநேக வைத்தியர். மருந்து அண்டர்க்கு ஈந்திடும் பீடு உளான்—தேவர்க்கும் மருந்து(அமிர்தம்) நல்கிய பெருமையுடையவன். அலகைக்கு எடுத்திட; அலகை-பேய்: அலகைக் கெடுத்திட பாடி. மடவீர்-அறிவீனரே, இளம் பெண்களே. இவ் வாவி சேர் பங்கயத்தை அழிப்பது-(விரக நோயைத் தணிக்க) தடாகத்திலுள்ள தாமரைகளைப் பறித்து அழிப்பது; ஆவி சேர் பங்கு அயத்தை அழிப்பது-உயிருடன் கூடிய ஆட்டைப் பாதியாக்கி அழிப்பது.

(௯௬) பருப்பதம்-பர்வதம். மாதலி-இந்திரன் தேர்ப்பாகன்; வடுப்படுசூதம்-வடுக்கள் பொருந்திய மாமரம். அரம்பை, வடு, சூதம்(சூதாடுகருவி), கமுகு, குளம்(சர்க்கரை), ஆல் இவை தலைவியின் தொடை, கண், தனம், கழுத்து, சொல், வயிறு இவ் வுறுப்புக்களுக்கு முறையே உவமை. தலைவியின் உருவெளித் தோற்றத்தைக் கண்டு தலைவன் கூறியவாறு.

(௯௭) தழையாவது: மலர்களை யிடையிலே வைத்துத் தழையினாற் செய்யப்பட்டதோர் உடை. தலைவன் கொடுத்த தழையைத் தோழி பெற்றுக்கொண்டு தலைமகளிடம் அதனை ஏற்குமாறளித்து அவ் விபரத்தைத் தலைவனிடம் தெரிவிப்பதாகச் செய்யுள் செய்வது. பாலன்-பிரகலாதன். துதிக்கை-துதித்தல், தும்பிக்கை. அங்குசக் கும்பம்—அழகிய தனமாகிய கும்பம், அங்குசமாகிய துறட்டுக்கோல் பொருந்திய மத்தகம். மாது அங்க விரகநோய்-தலைவியின் உடலிற் பொருந்திய காதல் நோய். மாதங்கம்-யானை.

(௯௮) மன்மதோபாலம்பனம்-மன்மதனைப் பழித்தல். பூதரம்-மலை. பூச்சரம்-புஷ்ப பாணம். அலர்-மலர், பழி. மாலையைப் பெற்றபின் சரத்து ஆசை கொள்வரோ? என்பது நயம். பையல், சிறுவன், இகழ்ச்சிக் குறிப்பு. தலைவனது மணமாலையை யடைந்த தலைவி, இதுகாறும் தன்னை வருத்திய மன்மதனை இகழ்கின்றாளென்க.

(௯௯) அலரி-சூரியன். வீடணனை முடி(கிரீடம்) தலை உற்றான்; சிரம் பத்தானை (இராவணனை) முடிதலை (வீதலை) உற்றான். வீரன்-சீராமன், வரிசிலை-கோதண்டம். "பேரெயில்சூழ் கடற்றென்னிலங்கை செற்ற பிரான் வந்துவீற் றிருந்த-பேரையிற்கே புக்கென் னெஞ்சம் நாடிப் பேர்த்துவர வெங்குங் காண மாட்டேன்" என்ற நம்மாழ்வார் ஏழாம்பத்து, மூன்றாந் திருவாய் மொழித் திருவாக்கும் உணர்க.

(௱) ஞானியராம் கேகயத்திற்கும் (மயிலுக்கும்),..........கரை சேர்வதற்கும், மாதவர் பூங்கழல் மண்டலம் தன்னில் அம்போதகம் (மேகம், அழகிய புணை) ஆகும் என்க. புண்டரிகம் புரை பூங்கழல்-தாமரை யொத்த அழகிய பாதம்.

திருப்பேரைக் கலம்பகம்—அரும்பொருள் விளக்கம் முற்றும்.

திருப்பேரைத் தாயார் சகாயம்.

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS
சென்னை-1

